# ஸ்ருதி

1

''இன்னும் பத்து நாளில் கல்யாணத்தை வெச்சுட்டு எங்கேம்மா வெளியே ஊர் சுத்த கிளம்பிட்டே.''

''என்னப்பா கிளம்பும்போது எங்கே போறேன்னு கேட்கிறீங்க? போற காரியம் நல்லபடியா நடக்குமா?''

ஸ்ருதி செல்லமாய் அப்பா செல்வராகவனிடம் கோபித்தாள். செல்வராகவனின் ஒரே செல்ல மகள் ஸ்ருதி. அம்மா கிடையாது. செல்வராகவன் சிட்டியில் நம்பர் ஒன் பிசினஸ் மேன். எக்கச்சக்கமான பணம். ஸ்ருதி ஆசைப்பட்டதை அடுத்த நிமிஷமே செய்வார். உதாரணம், போன வாரம்.

''அப்பா, எனக்கு இந்த கார் வேண்டாம்.''

''ஏம்மா?''

''இதுல போயி போயி போர் அடிச்சுடுச்சு. ப்ளட் ரெட் கலர்ல ஒரு ஐகானை வாங்கிக்கிறேன்.''



''வாங்கிக்கம்மா'' என்று சொல்லி தன் காரிலேயே கூட்டிக் கொண்டு போய் பஞ்சு மிட்டாய் வாங்கித் தருகிற மாதிரி ரெட் கலர் ஐகானை வாங்கிக் கொடுத்தார். நினைத்தால் வடபழனி கோயிலுக்குப் போகிற மாதிரி அடிக்கடி அமெரிக்காவுக்கும், லண்டனுக்கும் கூட்டிக் கொண்டு போனார்.

ஸ்டேட்ஸில் படித்துவிட்டு இந்தியா திரும்பிய யோகேஷுக்கு ஸ்ருதியை நிச்சயம் செய்திருந்தார்.

ஸ்ருதி பாலில் குங்குமப் பூவைக் கலந்து விட்டாற் போல் அழகாய் இருப்பாள். யோகேஷும் ஸ்ருதிக்கு ஏற்றாற் போல் கட்டுமஸ்தான உடல்கட்டால் ஸ்மார்ட்டாக இருந்தான்.

''இப்போ என்னம்மா திடீர்னு ஷாப்பிங்? மணி ஏழாகுது. இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லா கடையையும் மூடிடுவாங்க. அவனவன் தூங்கப் போயிடுவான்.''

''டாடி, டாடி, ப்ளீஸ் டாடி.. என் ப்ரெண்ட் நித்யாவை யையும் கூட்டிக்கிட்டு தான் போறேன். போயிட்டு ஒன்பது மணிக்குள் வந்துடுவேன்!''

''சரிம்மா.. சீக்கிரம் வந்துடு.. நீ வர்ற வரைக்கும் நான் சாப்பிட மாட்டேன்னு தெரியும்ல..?''

''தெரியும் டாடி தெரியும்.''

துள்ளலாய் சொல்லிக் கொண்டே, போர்டிகோவிலிருந்த காரை ஸ்டார்ட் செய்து டாப் கியரில் நித்யாவின் வீட்டை நோக்கி ஓட்டினாள்.

செல்வராகவன் உள்ளே வந்தார். சிறிய மனசஞ்சலத்துடன் சோபாவில் சாய்ந்தார். 'ஸ்ருதி கல்யாணமாகி போன பிறகு அவளை விட்டு எப்படி தனியாக இருக்கப் போகிறேனோ.. என் மனைவியும் என்னை விட்டுப் போய்விட்டாள். என் மகளையும் பிரியும் நேரம் வந்து விட்டதோ..'

செல்வராகவனின் கண்களில் நீர் கோர்த்தது. அப்பப்போ அவருக்குள் ஒரு குரல் மெல்ல ஒலித்துக் கொண்டிருந்தது. 'என்னங்க எப்படி இருக்கீங்க...? என்னை ஞாபகம் இருக்கா?' எத்தனைதான் மறக்க முயன்றாலும் அந்த நாட்கள், அந்த இனிய நினைவுகள், அந்த ஞாபகங்கள்.. வந்து கொண்டே இருந்தன.

அது.. அந்தக் காலம் மனைவி மாலாதேவியுடன் காதல் பிணைந்த காலம். தன் கடந்த காலத்தில் மூழ்கினார் செல்வராகவன்.

செல்வராகவனுக்கு மாலாதேவியைச் சீண்டிப் பார்ப்பதில் ஒரு அலாதி சுகம். அன்று மாலாதேவி தன் ட்ரெஸ்ஸிங் ரூமில் வெகு நேரமாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். செல்வராகவன் படபடவென கதவைத் தட்டினார்.

''கொஞ்சம் கதவைத் திறயேன்.''

''முடியாது.. கதவைத் திறந்தால் நீங்க சும்மா இருக்க மாட்டீங்க. என் மேக்கப்பை முடிச்சிட்டுதான் வெளியே வருவேன்.''



''ஆசையைப் பாரு.. நான் அதுக்காக ஒண்ணும் கதவைத் திறக்கச் சொல்லலை.. வளர்ப்புப் பிராணி ஒன்றை வாங்கி வந்துள்ளேன். நீ வெளியே வந்ததும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்..'' மாலாதேவி உள்ளே குஷியாய் துள்ளினாள்.

''வளர்ப்புப் பிராணியா வாங்கிட்டு வந்திருக்கீங்க?''

''இப்பவே பார்க்கணும்னு ஆசையா இருக்கா..?''

''ஆமாங்க!''

''உள்ளே முகம் பார்க்கும் கண்ணாடி இருக்குல்ல... அதில் உன்னைப் பார்த்துக்கோ..''

''யூ..!''

மாலாதேவி கதவைத் திறந்து வந்து செல்வராகவனை செல்லமாய் உதைக்கத் தொடங்கினாள். மாலாதேவியும் பதிலுக்கு செல்வராகவனை கிண்டல் செய்வாள்.

''நான் ஒரு ஜோக் சொல்லட்டுமா?''

''கார்ப்பரேஷனில் சாக்கடைகளை சுத்தம் செய்ய வருகிறார்கள்.''

''இது ஜோக்கா?''

''ஜோக் முடியறதுக்குள்ளே குறுக்கே பேசக் கூடாது!''

''ஓ.கே. கேரி ஆன்..''

''புருஷனே எதற்கும் உன் வாயைத் திறந்தே வைத்திரு..''

இரைந்து சிரிக்க ஆரம்பித்த செல்வராகவன் திடீரென்று வாயை மூடிக் கொண்டான். மாலாதேவி கேட்டாள்.

''எப்படி என் ஜோக்?''

''சகிக்கலை. நான் ஒரு ஜோக் சொல்லட்டுமா?''

''சொல்லித் தொலைங்க.''

''போன வாரம் பிஸினஸ் விஷயமாக மும்பை போயிருந்தேன்ல.. ராத்திரி முழுக்க சரியா தூக்கமில்லை. உன் நினைவுதான்!''

''இது ஜோக்கா?''

''ஜோக் முடியறதுக்குள்ளே குறுக்கே பேசக் கூடாது.''

''ஓ.கே. கேரி ஆன்.''

''காலையில் எழுந்தா என் நண்பன் அசோக் கேட்கிறான்.. ஏன் செல்வா ராத்திரி பூரா பூதம் பூதம்னு தூக்கத்திலே கத்திக்கிட்டு இருந்தே? ஏதாவது கனவு கண்டியா? அப்படிங்கிறான்.''

குபீரென்று சிரித்த மாலாதேவி முகத்தை கோபமாக வைத்துக் கொண்டாள்.

''போங்க என்னை 'பூதம் பிசாசு'ன்னு திட்டறதுன்னா நேரடியாகவே திட்டுங்களேன். ஏன் இப்படி மறைமுகமா திட்டணும்.''

இருவரும் சிரித்தார்கள்.



மாலாதேவி செல்வராகவனை ஆசையோடு பார்த்துச் சொன்னாள்.

''நம்ம ஆயுசு முழுக்க நாம இரண்டு பேரும் இதே மாதிரி சந்தோஷமாக இருக்கணும்.''

''இருந்துட்டா போச்சு!''

''உங்களுக்கு முன்னாடியே நான் சுமங்கலியா போயிடணும்.''

செல்வராகவன் அவளது வாயை வேகமாக மூடினான்.

''சந்தோசமா பேசிக்கிட்டு இருக்கிறப்ப கண்டதை பேசாதே...''

மாலாதேவியின் வாய்ச்சொல் மூன்றே மாதத்தில் பலித்து போனது. டைஃபாய்டு ஜுரம் வந்து சிகிச்சை பலனளிக்காமல் போய் சேர்ந்தாள். மாலாதேவி இறந்த பின் செல்வராகவனுக்கு வாழ்க்கையே சூன்யமாக இருந்தது. மாலாதேவியை ஜெராக்ஸ் எடுத்தாற் போலிருந்த ஸ்ருதியை செல்லமாய் பாசமாய் வளர்த்தார். அதே சமயம் செல்வராகவனிடம் கண்டிப்பும் இருக்கும்.

யோகேஷை நிச்சயித்த பின் போனில் மட்டும் இருவரையும் பேச அனுமதி தந்திருந்தார். மற்றபடி இருவரும் ஜோடியாக சுற்றுவதையும், யோகேஷ் ஸ்ருதி வீட்டுக்கு வருவதையும் ஸ்ருதி யோகேஷ் வீட்டுக்குச் செல்வதையும் கண்டிப்புடன் அனுமதிக்காமல் இருந்தார்.

2

செல்வராகவன் பழைய நினைவுகளை அசை போட்டபடி சோபாவில் சாய்ந்து தூங்கி போனார். ஹாலில் இருந்த கடிகாரம் மணிபத்தாகி விட்டதை 'டிங் டாங்', 'டிங் டாங்' என்று சொல்லிவிட்டு மறுபடியும் 'டிக் டிக்' கொண்டிருந்தது. செல்வராகவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார்.

''மணி பத்தாச்சா? ஒன்பது மணிக்கெல்லாம் வந்துடு வேன்னு ஸ்ருதி சொன்னாளே.. இன்னும் காணோம்? - செல்வராகவன் போர்ட்டிகோ வராந்தாவில் வந்து நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து கவலையாய் காத்திருந் தார். தன் வழுக்கையை அவஸ்தையாகத் தேய்த்துக் கொண்டு காம்பௌன்ட் வரைக்கும் நடந்து போய் ரோட்டில் ஏதாவது காரின் வெளிச்சம் தெரிகின்றதா என்று எட்டிப் பார்த்தார். தெருக்கோடி வரைக்கும் - நீளமாய் இருட்டு மட்டும் தெரிந்தது. செல்வராகவனுக்கு வயிற்றை கலக்கியது. இன்னும் என்னத்தை ஷாப்பிங் பண்ணிக் கிட்டிருக்கா..?

மறுபடியும் போர்டிகோ வராந்தாவுக்கு வந்து நாற்காலி யில் உட்கார்ந்தார். தவிப்பாய் நகம் கடித்து துப்பினார். யோசித்தார். அவளோட சிநேகிதி நித்யாவுக்கு போன் பண்ணி பார்த்தால் என்ன? ஒருவேளை ஸ்ருதி அவ வீட்டிலேயே உட்கார்ந்து அரட்டை அடிச்சிட்டிருக்கலாம்.. உள்ளே போய் ரிஸீவரை எடுத்து டீ - பாயின் மீதிருந்த ஸ்ருதியின் டைரியைப் புரட்டி நித்யாவின் நம்பருக்கு



சுழற்றினார். மறுமுனையில் நித்யாவின் அப்பா போனை எடுத்தார். செல்வராகவன் பதட்ட குரலில் சொன்னார்.

''ஹலோ! நான் ஸ்ருதியோட ஃபாதர் செல்வராகவன் பேசறேன்..!''

''அடேடே.. செல்வராகவன் ஸாரா.. என்ன ஸார் என்ன விஷயம்?''

''ஸ்ருதியோட ஷாப்பிங் போன உங்க டாட்டர் நித்யா அவ வீட்டுக்கு வந்துட்டாளா?''

நித்யாவின் அப்பா சொன்ன பதிலில் செல்வராகவன் அதிர்ந்து போனார்.

''வாட்? உங்க மகள் பெங்களூர் போய் ஒரு வாரம் ஆகுதா?''

''யெஸ் மிஸ்டர் செல்வராகவன்! நித்யா பெங்களூர்ல இருக்கிற அவங்க ஆன்ட்டி வீட்டுக்குப் போயிருக்கிறாள். வர்றதுக்கு எப்படியும் மூன்று நாளாகும். உங்க மகள் ஸ்ருதிக்குக் கூட இந்த விஷயம் தெரியுமே!''

மறுமுனையில் பலத்த நிசப்தம் நிலவியது.

''ஹலோ மிஸ்டர் செல்வராகவன்.. ஆர் யூ ஆன் தி லைன்..''

''யெஸ்..யெஸ் ஸ்ருதியும் என்னிடம் சொல்லியிருப் பாள்.. நான் ஏதோ ஞாபக மறதியில் உங்களுக்குப் போன் பண்ணிட்டேன். ஸாரி பார் தி டிஸ்டார்பன்ஸ்.''

''இட்ஸ் ஓகே.''

ரிஸீவரை வைத்துவிட்டு அதிர்ச்சியில் தொப்பென சோபாவில் உட்கார்ந்தார்.

அப்போ ஸ்ருதி யார் கூட ஷாப்பிங் போயிருப்பாள்? ஏன் இன்னும் காணோம்? என்னிடம் ஏன் இந்த நாடகம்? அடுத்தடுத்து கேள்வி கணைகள் அவரை துளைத் தெடுத்தன. செல்வராகவனின் இருதயப் பிரதேசம் பூராவும் இம்சை பிசைந்தது.

ஒருவேளை நித்யாவுடன் ஷாப்பிங் போறேன்னு சொல்லிட்டு திருட்டுத்தனமாய் யோகேஷைப் பார்க்க போயிருப்பாளோ? இருக்கலாம்.. செல்வராகவனின் நெஞ்சில் சிறிய தெம்பு துளிர் விட்டது. யோகேஷின் செல்லுக்கு பேசலாம் என்று டெலிபோனை நெருங்கினார். ரிஸீவரை எடுப்பதற்குள் தொலைபேசி அலறத் தொடங்கியது. ஸ்ருதியாக இருக்குமோ..! ஆர்வத்துடன் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

''ஹலோ...!''

''அங்கிள் நான் யோகேஷ்..!''

''அப்பாடா.. என்ன பிள்ளைங்களோ? வயசான காலத்தில் என்னை இப்படி தவிக்கவிட்டுகிட்டு..''

''என்ன அங்கிள் சொல்றீங்க..?''

''சரி, சரி, விளையாடினது போதும், ஸ்ருதியை உடனே கிளம்பி வரச் சொல்லு. நான் இன்னும் சாப்பிடாமல் இருக்கேன்னு சொல்லு!''



''என்ன அங்கிள் என்னென்னமோ சொல்றீங்க?... உங்களுக்கு வயசாயிடுச்சே ஒழிய உடம்பு பூராவும் இருபத்தி ஐந்து வயதுக்குரிய பையனின் குறும்புதான் ஒட்டியிருக்கு. காலையில் இருந்து கம்பெனியில் ஒரே வேலை. ஸ்ருதிக்கு போன் பண்ண முடியலை. சரி தூங்கப் போறதுக்கு முன்னாடி ஒரு குட்நைட் சொல்லலாம்னுதான் போன் பண்ணினேன். ஸ்ருதியிடம் போனைக் குடுங்க..!''

செல்வராகவன் அதிர்ந்தார்.

''என்னப்பா சொல்றே..! ஸ்ருதி அங்கேயும் வரலையா?''

''அய்யோ அங்கிள் ஆரம்பத்தில் இருந்து என்னென் னவோ சொல்றீங்க... எனக்கு ஒண்ணும் புரியலையே!''

''யோகேஷ்... ஸ்ருதி ஏழு மணிக்கே ஷாப்பிங் போறேன்னு கிளம்பினாப்பா.. இன்னும் வரலை. ஒருவேளை உன்னைத் திருட்டுத்தனமாய் பார்க்க வந்திருக்காளோன்னு நினைச்சேன். இப்போ அங்கேயும் வரலையா..? பின்னே எங்கே போயிருப்பா? எனக்கு ரொம்பப் பயமா இருக்குப்பா!''

''அங்கிள்...! டோண்ட் ஒர்ரி.. நான் இப்பவே அங்கே கிளம்பி வர்றேன்..''

ரிஸீவரை சாத்திவிட்டு செல்வராகவன் பழையபடி போர்டிகோவிலிருந்த ஸ்டூலில் போய் அமர்ந்தார். அடுத்த பத்தாவது நிமிடத்தில் யோகேஷ் அவன் காரில் வந்து இறங்கினான்.

''என்ன அங்கிள் இங்கே உட்கார்ந்திருக்கீங்க? ஸ்ருதி இன்னும் வரலையா..?''

செல்வராகவனால் பேச முடியவில்லை. யோகேஷின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கினார்.

''கமான் அங்கிள்.. டோண்ட் ஒர்ரி.. யுவர் செல்ப்.. வாங்க போலீஸ்ல கம்ப்ளெயிண்ட் கொடுத்துட்டு வரலாம்... அவங்க எப்படியும் ஸ்ருதியைக் கண்டுபிடிச்சு கொடுத்திடுவாங்க.''

''சரிப்பா..!''

கொஞ்சம் தெம்போடு யோகேஷுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு கிளம்பிச் சென்றார்.

## 3

## போலீஸ் ஸ்டேஷன்

அந்த நள்ளிரவில் போலீஸ் ஸ்டேஷனே நிசப்தமாயிருந்தது. காவலுக்கு நின்ற இரண்டு கான்ஸ்டபிள்சும் உட்கார்ந்தபடி தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். உள்ளே நைட் டூட்டியிலிருந்த சப் - இன்ஸ்பெக்டர் ஏதோ ஒரு பைலை புரட்டிக் கொண்டிருந்தார். செல்வராகவனைக் கண்டதும் எழுந்து நின்று ஒரு சல்யூட் கொடுத்தார்.

''என்ன சார் நீங்க போய் இங்க வந்துகிட்டு.. விஷயத்தை சொல்லியிருந்தால் நாங்களே உங்க வீட்டுக்கு வந்திருப்போமே..''



செல்வராகவனும், யோகேஷும் எதுவும் பேசாமல் நாற்காலியில் அமர்ந்தனர்.

செல்வராகவன் கேட்டார்.

''இன்ஸ்பெக்டர் பீட்டர் இல்லையா?''

''அவர் நாளைக்கு எர்லி மார்னிங் டூட்டிக்கு வந்துடுவார். என்ன விஷயம்னு சொன்னீங்கன்னா அவர் வந்ததும் நான் சொல்லிடறேன்!''

''வந்து.. ஏழு மணிக்கு ஷாப்பிங் போன என் பொண்ணு ஸ்ருதி இன்னும் வீடு திரும்பலை. காணோம். அவளை கொஞ்சம் கண்டுபிடிச்சுக் கொடுக்கணும்.''

''ஐ.. ஸீ.. டோண்ட் ஒர்ரி மிஸ்டர் செல்வராகவன்... இப்பவே நான் கான்ஸ்டபிள்களோடு கிளம்பறேன். சிட்டி பூராவும் அலசி விட்டு கண்டிப்பா உங்களுக்கு காலையில் தகவல் சொல்லிடறோம்..''

''வந்து.. விஷயம் கொஞ்சம் வெளியே தெரியாதபடி பார்த்துக்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன்.''

''ஷ்யூர் ஸார்..! நீங்க ஒரு மல்டி மில்லேனர். உங்க வீட்டு விஷயம் வெளியே வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது எங்கள் பொறுப்பு! இதில் ரிப்போர்ட்டை எழுதி ஒரு கையெழுத்துப் போட்டுட்டு நிம்மதியா கிளம்புங்க.. நாங்க பார்த்துக்கறோம்!''

சப்- இன்ஸ்பெக்டர் கொடுத்த வெள்ளை காகிதத்தை நிரப்பி கையெழுத்திட்டு அவரிடம் கொடுத்தார்

செல்வராகவன்... செல்வராகவனுக்கு கொஞ்சம் தெம்பு வந்தது.

''ஓ.கே. நாங்க கிளம்பறோம்.''

''யெஸ் சார்... நிம்மதியா போங்க.. நாங்க பார்த்துக்கறோம்..''

காலை பத்து மணி. செல்வராகவன் வீட்டிலிருந்த தொலைபேசி அலறத் தொடங்கியது.

''ட்ரிங்.. ட்ரிங்... ட்ரிங்...'

செல்வராகவன் ஓடிப் போய் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ..'' குரல் லெகுவாய் நடுங்கியது.

''மிஸ்டர் செல்வராகவன்... நான் இன்ஸ்பெக்டர் பீட்டர் பேசறேன். ஷாப்பிங் போன உங்க டாட்டர் காணவில் லைன்னு கம்ப்ளையிண்ட் கொடுத்திருந்தீங்களே... அது சம்மந்தமா கொஞ்சம் பீச்சுக்கு வர முடியுமா?''

''பீச்சுக்கா? எதுக்கு இன்ஸ்பெக்டர்?''

''அங்கே ஒரு டெட் பாடியைக் கண்டு எடுத்துள்ளோம். அது உங்க டாட்டர்தானான்னு நீங்கதான் வந்து பார்த்துச் சொல்லணும்.''

''நோ..! நோ..! அது என் ஸ்ருதியாக இருக்காது.. நான் இப்பவே கிளம்பி வர்றேன்..'' யோகேஷ் கேட்டான்.

''என்ன அங்கிள் சொல்றாங்க..?''



''பீச்சுல ஏதோ டெட்பாடி இருக்குதாம். அதை வந்து அடையாளம் காட்டச் சொல்றாங்க!''

யோகேஷ் லேசாய் அதிர்ந்தான்.

''வாங்க அங்கிள் சீக்கிரமாய் போய் பார்க்கலாம்!'' இருவரும் காரை எடுத்துக் கொண்டு ஸ்பாட்டுக்கு விரைந்தனர்.

பீச்சில் ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போனார்கள் செல்வராகவனும், யோகேஷும். இன்ஸ்பெக்டர் பீட்டர் வந்தார்.

''இவர் யார்?'' யோகேஷைப் பார்த்துக் கேட்டார்.

''என் வருங்கால மாப்பிள்ளை யோகேஷ்.''

''சரி. இந்த டெட் பாடி உங்க மகள் ஸ்ருதிதானா என்று பார்த்துச் சொல்லுங்க!''

இன்ஸ்பெக்டர் கையோடு கூட்டி வந்திருந்த அரசாங்க டாக்டரிடம் கண்ணைக் காண்பித்தார்.

டாக்டர் குப்புற விழுந்து கிடந்த உடம்பை புரட்டினார். சலனமில்லாமல் மல்லாந்தாள் ஸ்ருதி. ஆடையெல்லாம் கலைந்து முகத்திலும் உடம்பிலும் நகக் கீறல்கள் இருந்தன. செல்வராகவன் ஸ்ருதியைப் பார்த்து அங்கேயே மண்டியிட்டு அமர்ந்து வாய் விட்டு அழத் தொடங்கினார். யோகேஷ் சுத்தமாய் அதிர்ந்து ஸ்தம்பித்துப் போய் நின்றான்.

இரண்டு சப் - இன்ஸ்பெக்டர்கள் செல்வராகவனை சமாதானப்படுத்தி அந்த இடத்தில் இருந்து கூட்டிக்

கொண்டு போனார்கள். இன்ஸ்பெக்டர் பீட்டர் டாக்டரிடம் கேட்டார்.

“உயிர் பிரிஞ்சு எத்தனை நேரமாயிருக்கும் டாக்டர்!”

“நேத்து ராத்திரியே இறந்திருக்காங்க. ஜி.ஹெச்சுக்கு பாடியை எடுத்துக்கிட்டு போய் போஸ்மார்ட்டம் பண்ணினால் கொலையா தற்கொலையான்னு தெரிந்து விடும்!”

அடுத்த வினாடியே எல்லோரும் துரிதமாய் இயங்கினார்கள். ஸ்ருதியை எடுத்து ஜீப்பில் கிடத்தினார்கள். ஜீப் ஜி.ஹெச்சை நோக்கி சீறத் தொடங்கியது.

ஸ்ருதியின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டுக்காக பீட்டர், செல்வராகவன், யோகேஷ் மூவரும் பதட்டமாய்க் காத்துக் கொண்டிருந்தார்கள். செல்வராகவன் வெகுவாய் உலர்ந்து போயிருந்தார். அழுதழுது கண்களில் நிரந்தர சிவப்பு உறைந்து போயிருந்தது. சிறிது நேரத்துக்குப் பின் டாக்டர் ஸ்ருதியின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டுடன் வந்தார். செல்வராகவனைப் பார்த்துச் சொன்னார்.

“உங்க மகள் ஸ்ருதியை நாலைந்து பேர் ரேப் பண்ணி கொலை பண்ணியிருக்காங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் பாடியை ஒப்படைத்து விடுவோம்.”

“எ.. என்ன சொல்றீங்க? ஸ்ருதியை ரேப் பண்ணி கொலை பண்ணிட்டாங்களா? யாரு என் மகளை இப்படிப் பண்ணினது? இதுக்குத்தான் தலை தலையா அடிச்சுக் கிட்டேன். ராத்திரி நேரம் வெளியே போக வேண்டாம்னு கேட்டாளா?”



“அங்கிள், கண்ட்ரோல் யுவர்செல்ஃப்” - யோகேஷ் இன்ஸ்பெக்டர் பீட்டரை ஏறிட்டான்.

“மிஸ்டர் பீட்டர். எவன் இப்படி பண்ணினான்கிறதை கண்டுபிடிச்சு.. அவனை என்கிட்டே ஒப்படைங்க.. அந்த ராஸ்கலுக்கு என் கையாலதான் சாவு..”

யோகேஷ் கோபத்துடன் பல்லைக் கடித்தான்.

“யோகேஷ்! உங்க ஃபாதர் இன் லாவை கண்ட்ரோல் பண்ண சொல்லிட்டு நவ் யூ லூஸ் யுவர் கண்ட்ரோல். கேஸை எடுத்தோம் கவிழ்த்தோம்னு அவசரப்படக் கூடாது. மெதுவாகத்தான் கேஸை டீல் பண்ணி குற்றவாளியைக் கண்டுபிடிக்கணும். இந்த விஷயமா உங்க இரண்டு பேரையும் நாளைக்கு உங்க வீட்டுக்கு வந்து விசாரிக் கிறேன்.”

## 4

ஸ்ருதியோட அஸ்தியை கரைத்துவிட்டு வீடு திரும்பினார் செல்வராகவன். வெற்றுடம்பில் மெல்லிய டவலால் போர்த்தியிருந்தார். சோபாவில் உட்கார்ந்தார். யோகேஷை ஏறிட்டார். கவலை படிந்த ரேகையுடன் அமர்ந்திருந்தான்.

“யோகேஷ்! என் பொண்ணு உன் கூட வாழ்வதற்குக் கொடுத்து வைக்கலை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு வேற கல்யாணம் பண்ணிக்கோப்பா..”

யோகேஷ் விரக்தியாய் சிரித்தான்.

''ஸ்ருதியைத் தவிர என் மனதில் வேற யாருக்கும் இடம் கிடையாது அங்கிள். நாள் பூராவும் போனில் கலகலவெனப் பேசுவாள். இப்போ எல்லாமே போச்சே அங்கிள். வாழ்க்கையே வெறிச்சோடின மாதிரி இருக்கு. ஸ்ருதியை கைப்பிடிக்கப் போகும் நாளை ஒவ்வொரு நொடியும் எண்ணிக் கொண்டிருந்தேன். அவளை மாதிரி அன்பான பெண் எனக்கு கிடைக்க மாட்டாள். ஸ்ருதியோட நினைவு களோடு ஆயுசு பூராவும் வாழ்ந்துடறேன். எனக்கு அவளுடைய பசுமையான நினைவுகள் போதும். நான் ஒன்று கேட்பேன். அதற்கு மட்டும் சரியான பதிலைச் சொல்வீங்களா அங்கிள்?''

''எ.. என்னப்பா கேட்கப் போறே..?''

''ஸ்ருதி யார் கூட ஷாப்பிங் போனாள்?''

''த.. தனியாகத்தான் போனாள். ஒன்பது மணிக்குள் வந்துடுவேன் என்று சொன்னாள். அதனால்தான் நானும் அனுப்பினேன். ஷாப்பிங் போனவள் எங்கே எப்படி மாட்டிக்கிட்டாள்ங்கறதுதான் ஒண்ணும் புரியலை!''

''எனக்கும் அதான் அங்கிள் ஒரே குழப்பமாக இருக்கிறது. ஷாப்பிங் முடிச்சிட்டு யார் வீட்டுக்காவது அவள் போயிருக்கணும். போன இடத்தில்தான் இந்த அசம்பாவிதம் நடந்திருக்கு. அங்கிள் நான் கேட்கிறேனே என்று தப்பாக நினைக்காதீங்க.''

''சொல்லுப்பா..''



''ஸ்ருதிக்கு க்ளோஸ் பாய் ப்ரெண்ட்ஸ் இருக்காங்களா இல்லை கேர்ள் ப்ரெண்ட்ஸோட பிரதர்ஸ் யார் கூடவாவது க்ளோஸாக பழகுவாளா?''

''ஸ்ருதிக்கு நிறைய ப்ரெண்ட்ஸ் இருக்காங்க யோகேஷ். எல்லார் கூடவும் என் கண் முன்னாடிதான் போனில் பேசுவாள். ஆனால் அடிக்கடி ப்ரெண்ட்ஸோட வீட்டுக்கு அனுப்புகிற பழக்கம் எல்லாம் கிடையாது. அம்மா இல்லாத பொண்ணு. அதனால என்னுடைய கண்காணிப்பிலே வெச்சிருந்தேன். ஆனா ரோகிணின்னு அவளுக்கு ஒரு ப்ரெண்ட். அவளுடைய அண்ணனும் நல்லா பழக்கம். ஆரம்பத்தில் அவன் ஸ்ருதியிடம் நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந்தான்.''

செல்வராகவன் தயங்கினார்.

''சொல்லுங்க அங்கிள். எதுவாக இருந்தாலும் தைரியமா சொல்லுங்க. நான் தப்பா நினைக்க மாட்டேன்.''

''அவன் பேர் விஜயசேகர். நாளாக நாளாக ஸ்ருதிக்கு காதல் கடிதம் அனுப்புவதும் போனில் பேசி அவளைத் தொந்தரவு செய்வதுமாக இருந்தான். ஸ்ருதி இந்த விஷயத்தை என்னிடம் சொன்னாள். நான் அவனை வீட்டுக்கு வரவழைத்து நல்லா டோஸ் கொடுத்து அனுப்பிட்டேன். அப்புறம் ரோகிணியின் பேமிலி டெல்லிக்கு ட்ரான்ஸ்பர் கிடைத்துப் போய் விட்டார்கள். விஜயசேகர் மட்டும் ஸ்டடிஸ்க்காக ரூம் எடுத்து நண்பர்களுடன் தங்கியிருக்கான். ஒருவேளை பழைய விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு அவன் ஏதாவது செய்திருப் பானோ?''

யோகேஷ் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''அங்கிள், இதுபோதும் அங்கிள்.. இந்த டீடெய்ல்ஸ் போதும். இந்த விஷயத்தை தயவு செய்து இன்ஸ்பெக்டர் பீட்டரிடம் சொல்லிடாதீங்க. அந்த அயோக்கியனை கண்டுபிடிச்சு நம்ம ஸ்ருதியை கொன்ன அவனுக்கு என் கையால்தான் தண்டனை கொடுப்பேன்!''

செல்வராகவனிடமிருந்து விஜயசேகரின் ரூம் அட்ரஸை வாங்கிக் கொண்டு வேகத்துடன் கிளம்பிப் போனான் யோகேஷ்.

## 5

யோகேஷ் சென்ற பிறகு கூட செல்வராகவனின் மனதில் அந்த சந்தேகக் கீறல் இருந்து கொண்டே இருந்தது. நித்யாவுடன் ஷாப்பிங் போயிட்டு வர்றேன்னு சொன்னாளே.. நித்யா ஊரில் இல்லை... பின்னே யார் கூட போயிருப்பாள். ஏதாவது கள்ளக் காதலாக இருக்குமோ? சே.. சே.. அப்படியெல்லாம் இருக்காது. தினமும் யோகேஷுடன் மணிக் கணக்காக போனில் பேசிக் கொண்டிருப்பாள். யோகேஷை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு என்று ஆயிரம் தடவையாவது சொல்லியிருப் பாளே... பின்னே என்னிடம் பொய் சொல்லிட்டு எங்கே போனாள்? யாருடன் போனாள்? யோசிக்க யோசிக்க செல்வராகவனுக்கு தலைவலி அதிகரித்தது.

''அங்கிள்!''



வாசலில் நின்றிருந்த பெண்ணைப் பார்த்ததும் செல்வராகவன் முகம் மலர்ந்தார்.

''வாம்மா நித்யா!''

நித்யா நேராக.. நூறு சிவப்பு ரோஜாக்கள் பூத்து குலுங்கிச் சிரிப்பது போல.. சந்தன மாலையுடன் புன்னகைத்தவாறு இருந்த ஸ்ருதியின் படத்துக்கு தான் கொண்டு வந்திருந்த ரோஜா மாலையை அணிவித்துவிட்டு விசும்பினாள். செல்வராகவன் கவலையுடன் அவளருகில் வந்தார்.

''எனக்கு அழுதழுதே கண்ணீர் வத்திப் போச்சும்மா!''

''அங்கிள், நான் இப்போதான் பெங்களூரிலிருந்து வந்தேன். விஷயம் கேள்விப்பட்டதும் நேராக இங்கே தான் வர்றேன்.. என்ன அங்கிள் நடந்தது?''

''என் கூட வாம்மா..''

செல்வராகவன் மாடியிலிருக்கும் தன் அறைக்கு நித்யாவை அழைத்துப் போனார். கதவை தாளிட்டுக் கொண்டார்.

''உட்காரும்மா..''

''அன்னிக்கு என்ன நடந்ததுன்னா.. ஸ்ருதி 'நான் நித்யாவுடன் ஷாப்பிங் போயிட்டு வர்றேன்'னு சொல்லிட்டுக் கிளம்பிப் போனவள். அடுத்த நாள் நாலைந்து பேரால் கற்பழிக்கப்பட்டு பிணமாகத்தான் என் கைக்கு கிடைச்சாம்மா. நீ பெங்களூர் போயிட்டே. ஆனா ஸ்ருதி நான் நித்யா கூட போறேன்னு ஏம்மா பொய் சொல்லணும்?''

நித்யா புருவத்தைச் சுருக்கினாள்.

“நான் பெங்களூர் சென்ற விஷயம் ஸ்ருதிக்கு தெரியுமே அங்கிள்!”

“ஆனா எனக்கு தெரியாதேம்மா, அதை நல்லா பயன்படுத்திக்கிட்டு வெளியே எங்கேயோ போயிருக்கா. தயவு செய்து இந்த விஷயத்தை என் மாப்பிள்ளை யோகேஷுடம் சொல்லிடாதேம்மா. அவரிடம் ஸ்ருதி தனியாகத்தான் ஷாப்பிங் சென்றாள் என்று சொல்லியிருக்கேன்.”

“நான் யாரிடமும் எதுவும் சொல்ல மாட்டேன் அங்கிள். நித்யா கூட ஷாப்பிங் போறேன்னு உங்களிடம் பொய் சொல்லிவிட்டு கிளம்பினவள் எந்த மிருகத்திடம் எப்படி மாட்டிக் கொண்டாள்?”

“அதுதாம்மா எனக்கும் குழப்பமா இருக்கு.”

“நம்ம வீட்டிலேயே பாதி குழப்பம் இருக்கு. இதைப் போய் போலீஸிடம் சொல்லிடாதீங்க அங்கிள். அப்புறம் அவங்க ப்ரெஸ்-ல் வேற மாதிரி நியூஸாக்கிடுவாங்க. அவங்க கேட்கிற கேள்விக்கு யோசித்து பதில் சொல்லுங்க. அப்பதான் ஸ்ருதி மேல் அவங்களுக்கு சந்தேகம் வராமல் இருக்கும்.”

“சரிம்மா, யோகேஷுடம் விஜயசேகரைப் பற்றி சொல்லியிருக்கேன். அப்படியே அவனுடைய ரூம் அட்ரசையும் கொடுத்திருக்கேன். யோகேஷ் அவனைக் கண்டுபிடிச்சு விசாரிக்கிறேன்னு சொல்லியிருக்கான்.”

நித்யா பதட்டமானாள்.



“அய்யோ அங்கிள். விஜயசேகர் அட்ரஸை எல்லாம் ஏன் அங்கிள் கொடுத்தீங்க? இப்போ விஜயசேகருக்கு கல்யாணமாயிடுச்சு. அவன் ஒய்ப் வேற ப்ரெக்னென்ட்டாக இருக்காங்க. ஏதோ வயசு கோளாறுல அப்போ ஸ்ருதியிடம் அப்படி நடந்துக்கிட்டான். அதற்கு பிறகு என்னிடம் அதைப் பற்றி சொல்லி நிறைய வருத்தப்பட்டிருக்கான். நம்ம குடும்பத்தில் இருக்கிற குழப்பம் போதாதுன்னு விஜயசேகருடைய குடும்பத்தைக் குழப்பணுமா?”

“இப்போ அவன் எங்கேம்மா செட்டிலாகி இருக்கான்?”

“ரூம் எடுத்து தங்கியிருந்த அந்த ஏரியாவுலதான் சொந்தமாக வீடு கட்டி ஒய்ஃபுடன் இருக்கான்.”

செல்வராகவன் தன் நெற்றியில் ஆள் காட்டி விரலால் தேய்த்தார்.

ஸ்ருதியே உயிரோடு வந்து உண்மையைச் சொன்னால் தான் இந்த குழப்பத்துக்கெல்லாம் விடை காண முடியுமோ!

## 6

காலை பத்து மணி சென்னை நகரமே இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தது. கிண்டியில் செல்வராகவன் கொடுத்த அட்ரஸை வைத்து விஜயசேகரின் ரூமைக் கண்டுபிடித்தான் யோகேஷ். கதவைத் தட்டினான். சிறிது நேரத்திற்குப் பின் கதவு திறக்கப்பட்டது. வாலிப பையன் ஒருவன் வெளிப்பட்டான். யோகேஷ் கேட்டான்.

PDF Optimization Software

‘‘இங்கே விஜயசேகருன்னு..?’’

‘‘விஜயசேகர் என்று யாரும் இங்கே கிடையாதே..’’

‘‘அவனுடைய பேரண்ட்ஸ் டெல்லியில் இருக்காங்களாம். ஆனா அவன் மட்டும் இங்கே தங்கி இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருக்கிறானாம்.’’

‘‘ஸார், நீங்க சொல்கிற மாதிரி இங்கே யாரும் இல்லை. பழைய ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் எப்பவோ வெக்கேட் பண்ணிட்டு போயாச்சு. எனக்கு இதுக்கு மேல் எதுவும் தெரியாது!’’

- சொல்லிவிட்டு படாரென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

யோகேஷ் யோசனையுடன் அந்த ஏரியாவையே சுற்றி முற்றி பார்த்தான். நாலைந்து தெருவைச் சுற்றினான். ஆள் நடமாட்டமே இல்லாத அந்த தெருவில் அந்த மினி பங்களா அவனைக் கவர்ந்தது. அந்த பங்களாவை நெருங்கினான். நெருங்க நெருங்க அவன் கண்கள் பிரகாசித்தன. காம்பௌண்ட் சுவரில் க்ரானைட் கல்லில் விஜயசேகர், பி.இ. என்று பொறிக்கப்பட்டிருந்தது. வேக வேகமாய் கேட்டை திறந்து உள்ளே போய் பஸ்ஸரை அழுத்தினான். உள்ளிருந்து அழகிய இளம் பெண் வந்தாள்.

‘‘யாரு?’’

‘‘நான் யோகேஷ். விஜயசேகர் இருக்கானா?’’

விஜயசேகரின் மனைவி தேவி யோகேஷையே உற்றுப் பார்த்தாள். அவருடைய க்ளோஸ் ப்ரெண்டாக இருக்குமோ?



‘இருக்கானா?’ என்று இவ்வளவு உரிமையாய் கேட்கிறாரே, வாசலிலேயே நிற்க வைத்து பேசினால் ‘அவர்’ வந்து கத்துவார்.

‘‘நீங்க அவருடைய க்ளோஸ் ப்ரெண்டா? உள்ளே வாங்க.. அவர் இப்போ வந்திடுவார்!’’

யோகேஷ் உள்ளே போய் சோபாவில் அமர்ந்தான். தேவி கேட்டாள்.

‘‘நீங்க ஏன் எங்க கல்யாணத்துக்கு வரலை? உங்களைப் பற்றி அவர் இதுவரைக்கும் எதுவும் சொல்லியதில்லையே!’’

யோகேஷ் பதில் பேசாமல் அமர்ந்திருந்தான்.

‘‘எங்க கல்யாணத்தப்ப என்ன நடந்தது தெரியுமா?’’ என்று தேவி வளவளவென்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். யோகேஷும் எந்தவித சலனமும் இல்லை.

‘‘நானே பேசி பேசி ரொம்ப போர் அடிச்சுட்டேன். இருங்க காபி எடுத்துட்டு வர்றேன்!’’ தேவி காபி எடுத்துவர உள்ளே போனாள்.

‘‘தேவி!’’

குரல் வந்த திசையை யோகேஷ் திரும்பி பார்த்தான். விஜயசேகர் தன் ஷூக்களைக் கழட்டி விட்டு உள்ளே வந்து கொண்டிருந்தான்.

7

விஜயசேகரை பார்த்த உடனேயே யோகேஷ் கோபத்துடன் எழுந்து போய் அவனது காலரை இறுகப் பற்றினான்.

''யூ ராஸ்கல்! என் ஸ்ருதியை கொன்று விட்டு இப்போ உன் பொண்டாட்டிக் கூட ஜாலியா குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கியா?''

அவனது வயிற்றில் ஒரு உதை விட்டான். எதிர்பாராத தாக்குதலால் சற்று நிதானம் இழந்த விஜயசேகர் சுதாரித்துக் கொண்டு பதிலுக்கு யோகேஷுக்கு ஒரு உதை விட்டான். யோகேஷ் வலி தாங்காமல் சுருண்டு விழுந்தான். விஜயசேகர் கத்தத் தொடங்கினான்.

''யார்டா நீ? என் வீட்டுக்குள் வந்து கலாட்டா பண்றே? கராத்தேயில் ப்ளாக் பெல்ட்.. பின்னி எடுத்துடுவேன்.''

''என் ஸ்ருதியை ஏண்டா கொலை பண்ணினே?''

''ஸ்ருதியா? யார் ஸ்ருதி?'' விஜயசேகர் கொஞ்சம் நிதானத்துக்கு வந்தான்.

''நீங்க என்ன சொல்றீங்க?'' விஜயசேகர் யோகேஷை தூக்கி நிறுத்தினான். ''ஸ்ருதிக்கு என்ன ஆச்சு?''

''பொறுக்கி ராஸ்கல்! பண்றதை எல்லாம் பண்ணிட்டு என்னாச்சுன்னு கேட்கிறே? உன்னை சும்மா விட மாட்டேன். உன் நண்பர்களோடு சேர்ந்து ஸ்ருதியை ரேப் பண்ணிக் கொலை பண்ணிட்டு ஒண்ணுமே தெரியாத மாதிரி நடிக்கிறியா?''



''நான் ஸ்ருதியைப் ரேப் பண்ணினேனா..? அவளை நான் நேரில் பார்த்து ரொம்ப நாளாச்சு.''

''பொய் சொல்லாதேடா டாமிட்'' - யோகேஷ் மறுபடியும் விஜயசேகரின் சட்டையைப் பிடிக்கப் போனான்.

விஜயசேகர் அவனது கையை தட்டி விட்டான்.

''டேய், என்ன ஏதுன்னு ஒழுங்கா தெரிஞ்சுக்காம இங்கே வந்து குரைச்சுக்கிட்டு இருக்காதே.''

''நான் குரைக்கிறேனா? போலீஸோட வந்து உன்னைப் பார்த்துக்கிறேன்.''

''சர்தான் போடா..''

யோகேஷ் விறுவிறுவென வெளியேறியதும் சுவரோரமாய் பதுங்கி இருந்த தேவியைப் பார்த்து முறைத்தான் விஜயசேகர்.

''ஏண்டி கொஞ்சமாவது அறிவிருக்கா? யாரு என்ன ஏதுன்னு தெரியாம கண்டவனையும் இப்படித்தான் வீட்டுக்குள் விட்டுடறதா?''

''என்னங்க யாரிவன்? என்னென்னமோ சொல்லிட்டுப் போறான், எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு.''

''கண்ட நாயை வீட்டுக்குள் கூட்டி வெச்சு பேசிக்கிட்டிருந்தேல்ல இப்போ நல்லா பயந்து சாவு.''

தேவியைப் பார்த்துக் கத்திவிட்டு தன் அறைக்கு சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு கட்டிலில் சாய்ந்தான்

விஜயசேகர். ஏ.ஸி.யின் குளுமையிலும் மனசு படபடவென்று அடித்து வியர்த்து வழிந்தது.

ஸ்ருதி.. அந்த அழகுப் புயலை யார் கொன்றது? குற்றவாளி யாராக இருக்கும்?

## 8

இன்ஸ்பெக்டர் பீட்டர், செல்வராகவனோடு விஜயசேகரின் மினி பங்களாவுக்கு வந்து இறங்கினான் யோகேஷ். பீட்டரும் செல்வராகவனும் வீட்டை நோட்டமிட்டபடி வந்தனர். வாசற் கதவு திறந்தே இருந்தது. பீட்டர் தனது லத்தியால் கதவைத் தட்டினான். தேவி உள்ளேயிருந்து வந்தாள். போலீஸ் உடுப்பைப் பார்த்ததும் நடுங்கினாள்.

''யா.. யார் வேணும்?''

பீட்டர் கேட்டார்.

''உங்க ஹஸ்பெண்ட் விஜயசேகர் இருக்காரா?''

''இருக்கார்.. வாங்க..''

ஆபீஸ் கிளம்பும் நேரம் போலீஸ் தன் வீட்டுக்கு வந்ததை பார்த்து அதிர்ந்து போனான் விஜயசேகர். பீட்டரைப் பார்த்துச் சொன்னான்.

''யெஸ் இன்ஸ்பெக்டர்.. விஷயத்தை நானும் கேள்விப்பட்டேன். ஸ்ருதியை யார் கொன்னிருப்பாங்கன்னு



ஒரே குழப்பமா இருக்கு. குற்றவாளியைக் கண்டுபிடிச்சிட்டீங்களா இன்ஸ்பெக்டர்.''

''இப்படியெல்லாம் பேசி எங்களைத் திசை திருப்பப் பார்க்கிறீங்களா? ஸ்ருதி கொலை விஷயமா உங்களை விசாரிக்க வந்திருக்கேன்.''

''தாராளமா... என்ன கேட்கணுமோ கேளுங்க. ஏன் நானே எல்லாத்தையும் சொல்றேனே.. ஸ்ருதி என் தங்கை ரோகிணியோட ப்ரெண்ட். நான் ஸ்ருதியைக் காதலித்தது உண்மைதான்! அவள் மேல் உள்ள மோகத்தால் அவளிடம் போனில் அசிங்கம் அசிங்கமா பேசுவேன். அப்புறம் செல்வராகவன் அங்கிளும் என் டாடியும் என்னைக் கண்டிச்சாங்க. அதனாலேயே என் டாடி தேவியைப் பார்த்து எனக்கு சீக்கிரமா கல்யாணத்தை முடிச்சிட்டார். கால்கட்டு போட்ட பிறகு தான் நான் என் தவறை உணர்ந்தேன். ஸ்ருதியின் தோழி நித்யாவிடம் நான் என் தவறை உணர்ந்து எவ்வளவோ வருத்தப்பட்டிருக்கேன்.''

''ஸ்டாப் இட்! இந்த கட்டுக் கதையெல்லாம் வேண்டாம். நட ஸ்டேஷனுக்கு.. எதுவாயிருந்தாலும் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லு..''

''நோ இன்ஸ்பெக்டர்... நான் சொல்வது எல்லாம் உண்மை..''

செல்வராகவன் விஜயசேகரிடம் பக்குவமாய் கேட்டார்.

''இதோ பாருப்பா.. நீ உண்மையைச் சொன்னால் உனக்கு தண்டனை குறையும். நீ சொல்கிற உண்மையில் என் மகள்

திரும்ப வர மாட்டாள்தான். ஆனால் நடந்தது என்னன்னு தெரிஞ்சுக்கணும்னு மனசு தவிக்குது.''

''அய்யோ அங்கிள்.. ஸ்ருதியின் சாவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இன்ஃபாக்ட் சம்பவம் நடந்த அன்னிக்கு நானும் என் மனைவியும் என் ப்ரெண்ட் தீபக் வீட்டில் இருந்தோம். அவன் பார்ட்டிக்கு இன்வைட் பண்ணியிருந்தான். இதோ அவனுடைய அட்ரெஸ் அண்ட் போன் நம்பர், வேணும்னா அவனிடமும் விசாரிச்சுப் பாருங்க.''

சொல்லிவிட்டு விசிட்டிங் கார்டை பீட்டரிடம் நீட்டினான். பீட்டர் நிமிர்ந்து யோகேஷைப் பார்த்தார்.

''மிஸ்டர் யோகேஷ், விஜயசேகர் ரொம்ப தெளிவாக யிருக்கிறார். ஐ திங்க் ஹி இஸ் நாட் தி கல்ப்ரிட்..''

யோகேஷும் ஆமோதித்தான்.

''யெஸ் இன்ஸ்பெக்டர்.. விஜயசேகர் பார்க்கத்தான் முரடனாக தெரிகிறான். ஆனால் மிக தெளிவாக இருக்கிறான். அப்போ கொலைகாரன் வேறு யாராக இருக்க முடியும்?''

''கண்டுபிடிக்கலாம்.. ஸாரி மிஸ்டர் விஜயசேகர். உங்களை வீணாக சந்தேகப்பட்டதற்கு எங்களை மன்னியுங்கள். இருந்தாலும் கேஸுக்குத் தேவைப்பட்டால் உங்களை மறுபடியும் கூப்பிடுவோம்.''

''வித் ப்ளஷர் இன்ஸ்பெக்டர். நான் கண்டிப்பாக கோவாப்பரேட் பண்ணுவேன்'' விஜயசேகர் சொன்னான்.



நாட்கள் நகர்ந்தன. ஸ்ருதியின் மரணத்தால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்படத் தொடங்கினான் யோகேஷ். ஸ்ருதியின் நினைவுகள் அவனை பெரிதும் வாட்டின. உலகப் புகழ் பெற்ற அவள் எழுதிய காதல் கடிதம்தான் அவன் நினைவுக்கு வந்தது.

அவள் பேரழகி எலிஸபெத் பேரட்! அவன் பெருங்கவிஞன் ராபர்ட் ரௌனிங்!

யோகேஷ் நான் உங்களை எப்படியெல்லாம் நேசிக்கி றேன், தெரியுமா?

ஒவ்வொன்றாக துவக்கி அவள் எழுதிய காதல் கடிதம் அது!

ஸ்ருதி சொன்னாள்,

'எனக்கு மட்டும் கற்பனைத் திறமையும் எழுத்து வன்மையும் இருந்தால் இதைவிட அற்புதமான கடிதத்தை நான் எழுதியிருப்பேன் யோகேஷ். ஏன் தெரியுமா? எலிஸபெத் தன்னை ஒருத்தியாகவும், ராபர்ட்டை இன்னொருவனாகவும் நினைக்கிறாள். ஆனால் நான் அப்படியல்ல யோகேஷ்... நீங்களும் நானும் வேறு வேறு நபர்கள் என்று ஒருக்காலும் நான் நினைத்ததில்லை யோகேஷ். அப்படி நினைக்கவும் என்னால் முடியாது யோகேஷ்!'

டெலிபோனில் அவள் காதல் கவிதைகளாக பொழிந்த அந்த நாள் திரும்பி வருமா? தாழம்பூ வத்தியின் மணம் போல் அவனையே சுற்றிச் சுற்றி வந்து ஆக்ரமித்து, அவனை கிறங்கடித்த அந்த வார்த்தைகள்! யோகேஷின்

உடல் நடுங்கிற்று. உணர்வுகள் தடதடக்க இதயமே துடிதுடித்தது.

'ஸ்ருதி! ஸ்ருதி! என்ன சொன்னாய்? நீயும் நானும் வேறல்ல என்றுதானே? காதல் போதையில் வெளிவந்த வசனமும் அல்ல! உள்ளும் புறமும் உண்மை சொல்லும் ஒரு மாசற்ற பெண்ணின் நேர்மையான நெஞ்சம் வெளியிட்ட சத்தியப் பிரகடனம் அது! ஆனால் இப்போ ஸ்ருதி நீயில்லாமல் வாழ்க்கையே சூன்யமாக இருக்கிறது.

'ஸ்ருதி! மை டியர் ஸ்ருதி! என்னை அனாதையாக்கி விட்டுவிட்டு, நீ மட்டும் போயிட்டியே.. உன் நினைவுகளால் வாடுகிறேன் ஸ்ருதி! அய்யோ! நீ இல்லாத வாழ்க்கையை நினைச்சுப் பார்க்க முடியலையே..' அதற்கு மேல் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் குலுங்கி குலுங்கி அழத் தொடங்கினான் யோகேஷ்.

## 9

இன்ஸ்பெக்டர் பீட்டர் செல்வராகவனை போனில் தொடர்பு கொண்டார்.

''செல்வராகவன் ஸார்! நான் பீட்டர் பேசறேன்!''

''சொல்லுங்க பீட்டர்! கேஸில் ஏதாவது திருப்பம் வந்திருக்கா?''

''ஆமா ஸார், ஒரு கார் ஒன்று ரொம்ப நாட்களாக பிரின்ஸ் பிளாசா காம்ப்ளெக்ஸில் பார்க்கிங்கில் இருக்கிறதாம். பிரின்ஸ் பிளாசாவின் ஓனர் எனக்கு போன் பண்ணினார்.



அந்தக் காரை உடனடியாக அப்புறப்படுத்தும்படியாகவும், ரொம்ப பயமாக இருப்பதாகவும் சொன்னார். நீங்க வந்தீங்கன்னா அந்த கார் ஸ்ருதியுடையதுதானா என்பதைக் கண்டுபிடிக்க உபயோகமாக இருக்கும்.''

செல்வராகவன் படபடப்புடன் கூறினார். ''இதோ இப்பவே கிளம்பி வர்றேன் பீட்டர்!''

பிரின்ஸ் பிளாசாவின் ஓனர் அலுத்துக் கொண்டார். ''என்ன இன்ஸ்பெக்டர் கடையை மூடின பிறகு வந்திருக்கீங்க?''

''ஆமா ஸார்! இரவில் வந்தால்தான் எந்த டிஸ்டர்பென்ஸும் இல்லாமல் காரை சோதனை போட்டு எடுத்துட்டுப் போக முடியும்!''

கார் இருந்த இடத்திற்கு பீட்டரையும் செல்வராகவனையும் அழைத்துப் போனார் ஓனர். ஒரு ஓரமாக நின்றிருந்த காரை பார்த்ததும் செல்வராகவன் பரவசமானார்.

''பீட்டர்..! பீட்டர்..! இந்த ரெட் கலர் போர்ட் ஐகான் என் ஸ்ருதியின் கார்தான்'' வேக வேகமாய் காரின் அருகில் போய் போலி சாவியைப் போட்டு கதவைத் திறந்து உள்ளே போனார். பீட்டரும் உள்ளே அலசத் தொடங்கினார்.

''ம்.. கார் அப்படியே புத்தம் புதுசாய்தானிருக்கு. இந்த கார் ரொம்ப நாட்களாக இங்கே இருக்கிறதுன்னு சொன்னீங்க.. பின்னே ஏன் எனக்கு முன்னாடி இன்பார்ம் பண்ணலை?''

''ஸாரி இன்ஸ்பெக்டர்..! ஒரே வேலை. எவன் என்னிடம் எதை ஒழுங்காக வந்து சொல்றானுங்க. நானே நேத்து ராத்திரிதான் ஊரிலிருந்து வந்தேன்.''

''இந்தக் கார் ஸ்ருதின்னு ஒரு பொண்ணுடையது. அந்தப் பெண் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் எத்தனை மணிக்கு இங்கே வந்துட்டுக் கிளம்பிப் போனாள் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''இன்ஸ்பெக்டர் இங்கே ஒரு நாளைக்கு ஆயிரத்துக்கும் மேலே கஸ்டமர்ஸ் வந்துட்டு போறாங்க. அதுல போய் இந்த ஸ்ருதி எப்ப வந்தாங்கன்னு கேட்கிறீங்களே?''

''ஓ.கே.. நாங்களே கண்டுபிடிச்சுக்கிறோம்!''

''அந்தப் பெண்ணை காணோமா இன்ஸ்பெக்டர்?''

''அவளை நாலைந்து பேர் ரேப் பண்ணி கொன்னுட்டாங்க. அது விஷயமாகத்தான் இந்த கேஸை இப்ப நடத்திக்கிட்டிருக்கோம்.''

ஓனர் லேசாய் திடுக்கிட்டார்.

''ஐ.. ஸீ!''

''நாங்க கிளம்பறோம். வேற ஏதாவது டீடெயில்ஸ் கிடைத்தால் எங்களுக்கு தெரியப்படுத்துங்க.''

ஸ்ருதியின் காரிலேயே செல்வராகவனுடன் பீட்டரும் அவர் வீட்டுக்குச் சென்றார்.

''வெல்கம் பீட்டர்..!''



''வீட்டில் யாரும் இல்லையா..? யோகேஷ் எங்கே?''

''ஸ்ருதியின் மறைவால் யோகேஷ்தான் ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கான். நடைப்பிணமாய்த் திரியறான்.''

''எனக்கு ஒரு சின்ன சந்தேகம் செல்வராகவன். ஸார்.. தப்பா நினைக்காதீங்க.. உங்க டாட்டர் ஸ்ருதிக்கு வேறு ஏதாவது காதல் விவகாரம் இருந்திருக்குமோ?''

''நோ, நோ.. என் மகள் ரொம்ப நல்லவள் பீட்டர் ஸார்! யோகேஷ் மேல் உயிரையே வைத்திருந்தாள். இருவருக்கும் கல்யாணம் நடக்கிறதுக்கு பத்து நாளைக்கு முன்னாடி இப்படி கொலை செய்யப்பட்டதால் நிறையப் பேருக்கு இந்த சந்தேகம்தான்!''

''ஸ்ருதியோட அறையைப் பார்க்கலாமா?''

''ஓயெஸ்.. தாராளமா!''

ஹாலினுள் விரிந்து சென்ற படிக்கட்டுகளில் ஏறி வலது புறமாக இருந்த அறைக்கு பீட்டரை அழைத்து போனார். பீட்டர் அறையைச் சுற்றிப் பார்த்தார். ஆளுயர லாமினேஷனில் சிரித்தபடி ஸ்ருதி நின்று கொண்டிருந்தாள். அந்தப் படத்தைப் பார்த்த பீட்டர் ஒரு கணம் அசந்து போனார். இத்தனை அழகா! அவள் அழகுதான் அவளுக்கு எமனானதோ.. என்னென்ன கனவுகள் கொண்டிருந்தாளோ.. எல்லாமே கருகிப் போச்சே என்று எண்ணியபடி மேஜை டிராவையும் அலமாரியையும் அலசினார். யோகேஷ் அனுப்பின பரிசுப் பொருளும் க்ரீட்டிங் கார்டுகளும் எக்கச்சக்கமாக குவிந்து கிடந்தன.

''இந்த அறையில் ஒரு க்ளூவும் கிடைக்கலை. ஸ்ருதியோட கார் கிடைச்சிருக்குல்ல. அதை வெச்சு ஈஸியா கொலைகாரனைக் கண்டுபிடிச்சிடலாம்.''

''எப்படி பீட்டர் கண்டுபிடிப்பீங்க?''

''உங்க டாட்டர் பிரின்ஸ் பிளாசாவில் ஷாப்பிங் பண்ணிட்டு அப்படியே கால் நடையாக வேற எங்கேயாவது போயிருக்கணும். பிரின்ஸ் பிளாசாவின் அருகிலிருக்கிற கடைகளில் விசாரிச்சுப் பார்த்தால் தெரிய வாய்ப்பிருக்கு.''

''ஸ்ருதிக்கு விரோதிகள் என்று யாருமே கிடையாது பீட்டர். ஏதோ ஈவ் டீஸிங்கில் மாட்டிக்கிட்ட மாதிரி தெரியுது.''

''நோ, நோ! தெரிஞ்சவங்க யார் கூடவோதான் வெளியே போயிருக்காங்க.. போன இடத்தில் நல்லா வசமா மாட்டிக்கிட்டாங்க. இந்த விஷயம் க்ளியரா புரியுது. குற்றவாளி யார் என்பதை விரைவில் கண்டுபிடிச்சிட லாம்!''

''குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டால் என் மகள் திரும்ப உயிரோட வரப் போறாளா இல்லை அவளுக்கு ஏற்பட்ட களங்கம்தான் விலகப் போகுதா?''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க செல்வராகவன் ஸார். குற்றவாளியை கண்டுபிடிக்க வேண்டியது எங்க கடமை. குற்றவாளியைக் கண்டுபிடிச்சால்தான் ஸ்ருதிக்கு ஏற்பட்ட களங்கம் விலகும்!''



26050

## 10

விஜயசேகர் ஏ.ஸி. ரெஸ்டாரெண்ட்டில் அமர்ந்து சூடான காபியை பருகிக் கொண்டிருந்தான். அவனையும் அறியாமல் அவன் பின்னாடி அமர்ந்திருந்த நபர்களின் பேச்சு வார்த்தை துல்லியமாய் விஜயசேகர் காதில் விழுந்தது.

''ஏண்டா, கையை இத்தனை தடவை சோப்பு போட்டு கழுவிட்டு வந்தே?''

''ரொம்ப அழுக்காயிருந்துச்சு!''

''டாக்டர் தொழில்ன்னாலே அழுக்கு கைதானே! அதை வேற நீயே ஏன் சொல்லிக்கிறே..?''

''என்ன நக்கலா? நீ மட்டும் யோக்கியனா? வக்கீல் தொழிலும் கை சுத்தம் கிடையாது..''

''எந்தத் துறையில் தான் எல்லோருடைய கையும் சுத்தமாய் இருக்கு? எல்லோருடைய கையும் அழுக்கு தான்!''

''என்னமோ ஒரு பொழப்புடா.! யாரிடமும் கை நீட்டி லஞ்சத்தை வாங்காம இருக்க முடியலை. ஆரம்பத்துல தான் மனசாட்சி உறுத்திற்று. அப்புறம் போகப் போக எல்லாமே பழகிப் போச்சு. அன்னிக்கு கூட ஒரு கொலை கேஸுக்கு ரேப் கேஸாக மாத்தி எழுதி போஸ்ட்மார்ட் ரிப்போர்ட் தரச் சொன்னாங்க. அவங்க சொன்ன மாதிரியே போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை மாத்தி எழுதி கொடுத்துட்டேன். அதுக்கு பத்து லட்சம் கொடுத்தாங்க.''

வக்கீல் வாயை பிளந்தான். ''பத்து லட்சமா! ஹய்யோ.. யார்டா அவ்வளவு பணத்தைக் கொடுத்தது?''

''சிட்டியில் ஒரு மல்டி மில்லேனர்!''

விஜயசேகர் சரேலென நிமிர்ந்தான். திரும்பி பார்த்தான். ஆஷ் கலரில் சட்டை அணிந்திருந்த டாக்டரின் முகத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டான். டாக்டரும், வக்கீலும் ஆர்டர் செய்ததை சாப்பிட்டுவிட்டு அவரவர் காரில் கிளம்பி போனார்கள்.

விஜயசேகர் டாக்டரின் காரை ஃபாலோ பண்ணிக் கொண்டிருந்தான். டாக்டரின் கார் க்ரோடன்ஸூம் காகித பூக்களும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த வீட்டின் போர்ட்டிகோவிற்குள் நுழைந்தது. காரை லாக் செய்துவிட்டு ஆள்காட்டி விரலில் சாவியை சுழற்றியபடி வீட்டின் கதவைத் திறந்து உள்ளே போனார் டாக்டர்.

பொண்டாட்டியும் குழந்தையும் ஊருக்குப் போயாச்சு. தனியா நிம்மதியா இருக்கலாம். வாசற் கதவை சாத்தப் போனவர் அதிர்ந்தார். விஜயசேகர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்து கதவைத் தாளிட்டான்.

''ஏய், யார் நீ?''

''நான் யாராக இருந்தால் உனக்கென்ன? ஸ்ருதியை நாலைந்து பேர் ரேப் பண்ணி கொன்னுட்டாங்கன்னு ஏன் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை மாத்தி எழுதினே?''

''ஸ்ருதியா? யார் ஸ்ருதி? எனக்கு எந்த ஸ்ருதியும் தெரியாது!''



விஜயசேகர் டாக்டரின் கழுத்தில் தன் முழங்கையால் ஒரு குத்து விட்டு தளர செய்தான். டாக்டர் சோர்வாய் சாய்ந்தார்.

''சொல்லிடறேன்.. உண்மையைச் சொல்லி விடு கிறேன். நீ யார் என்பதை முதலில் சொல்லு.''

''நான் ஸ்ருதிக்கு வேண்டியவன்!''

''ஸ்ருதியை யாரும் ரேப் பண்ணலை.. யாரோ கொலை பண்ணியிருக்காங்க..''

விஜயசேகர் புருவங்கள் விரிந்தன.

''யார் கொலை பண்ணினது?''

''யார் என்ன என்பது எனக்குத் தெரியாது. கொலை செய்தவரின் மேனேஜர்தான் எனக்கு பத்து லட்சத்தை கொடுத்து ரிப்போர்ட்டை மாத்தி எழுதச் சொன்னார். இன்னி வரைக்கும் கொலைகாரன் யார் என்பது எனக்கு நிஜமாகவே தெரியாது. ஆனால் போஸ்ட்மார்ட்டத்துக்கு ஸ்ருதியின் பாடி வந்தபோது அவள் கையில் ஒரு சிவப்பு நிற பட்டன் இருந்தது. இந்த விஷயம் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அந்த பட்டனும் என்னிடம்தான் இருக்கிறது!''

''காண்பி!''

இரண்டு கையையும் தரையில் ஊன்றி மெதுவாக எழுந்து போய் அந்த சிவப்பு கலர் பட்டனை எடுத்து வந்து விஜயசேகரிடம் கொடுத்தார் டாக்டர்.

விஜயசேகர் அந்தப் பட்டனை வாங்கித் திருப்பி திருப்பிப் பார்த்தான். இந்த பட்டனை வைத்து குற்றவாளியைக் கண்டுபிடிப்பது எப்படி?

''சரி, நான் வந்து போன விஷயத்தை யாரிடமாவது சொன்னே.. உன்னை போலீஸில் பிடிச்சுக் கொடுத்துடுவேன்.''

''போலீஸில் என்னைப் பத்தி சொல்லிடாதே.. நீ வந்து போனதைப் பற்றி யாரிடமும் மூச்சு விட மாட்டேன்.''

''அது!''

## 11

செல்வராகவன் யோகேஷை வீட்டுக்கு அழைத்திருந்தார். யோகேஷை பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. ஸ்ருதி இறந்ததிலிருந்து ஷேவ் செய்யாமல் விட்டதில் தாடி நன்றாக வளர்ந்திருந்தது. செல்வராகவன் யோகேஷை கவலையாய் ஏறிட்டார்.

''யோகேஷ்! ஸ்ருதியையே நினைச்சு நினைச்சு உருகி உன் உடம்பையும் மனசையும் ஏம்பா கெடுத்துக்கறே? நீ எவ்வளவுதான் அவளை நினைச்சுக்கிட்டிருந்தாலும் போனவ திரும்பியா வரப் போறா?''

யோகேஷ் செல்வராகவனை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''அங்கிள்..! நீங்களா இப்படி பேசறீங்க?''



''வேற என்னப்பா பண்றது நம்ம மனசை மாத்திக்கிறதைத் தவிர..''

''போலீஸ் என்ன சொல்றாங்க?''

''ஸ்ருதியோட காரைக் கண்டுபிடிச்சிருக்காங்க.. அவளை கொலை செய்தவனை கண்டுபிடிக்க எப்படியும் ஒரு வருஷம் ஆயிடும்.''

''காரை கண்டுபிடிச்சுட்டாங்களா... இனிமேல் கொலைகாரன் ஈஸியா பிடிபட்டு விடுவான். நடந்தது என்னவென்று தெரிஞ்சுடும்!''

''யோகேஷ்! நான் ஒண்ணு சொல்லுவேன் கேப்பியா?''

''என்ன அங்கிள்?''

''சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோ.''

''நெவர். ஸ்ருதியை தவிர என் மனசில் வேற எந்தப் பெண்ணுக்கும் இடம் கிடையாது.''

''அப்படி சொல்லாதே யோகேஷ். ஸ்ருதியை மறந்துவிடு. அவள் எப்படியும் திரும்பி வரப் போறதில்லை.''

''என்னால் மறக்க முடியலையே அங்கிள்! கண்ணை மூடினாலே ஸ்ருதிதான் தெரியறா..''

''நீ இங்கேயே இருக்க இருக்க அவள் நினைப்பு அதிகமாகுமே தவிர குறைய போறதில்லை. அதனால எங்கேயாவது வெளிநாட்டிற்குப் போயிடு.''

''எங்கே அங்கிள் போறது?'' சுவாரஸ்யம் இல்லாமல் கேட்டான்.

''உனக்கு கனடா ரொம்பப் பிடிக்குமே.. அங்கே போயிடு.''

''சரி அங்கிள்..! யோசனை பண்றேன்... உங்க உடம்பைப் பார்த்துக்குங்க.. நான் கிளம்பறேன்.''

''இருப்பா விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். சாப்பிட்டு விட்டு கிளம்பலாம். என்னிக்கிருந்தாலும் நீ இந்த வீட்டுப் பிள்ளை!''

''அங்கிள்! எனக்கு எதுக்கு இந்த விருந்தெல்லாம்? சந்தோஷமாக சாப்பிடக் கூடிய நிலையிலா நான் இருக்கிறேன்?''

''இருக்கட்டும் யோகேஷ்! நீ கனடா போயிட்டா திரும்ப எப்ப வருவியோ தெரியாது. பொண்ணையும் மாப்பிள்ளையையும் சேர்த்து உட்கார வச்சு விருந்து கொடுக்க நான் கொடுத்து வைக்கலியே. என்னமோப்பா எல்லாம் விதி! ஸ்ருதியை மறந்துட்டு சீக்கிரம் வேற கல்யாணம் பண்ணிக்கிட்டு நீயாவது சந்தோஷமா இருப்பா..?''

''நடக்கிற காரியமா பேசுங்க அங்கிள்! எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. நீங்க வற்புறுத்திற தாலதான் இந்த கனடா பயணம்..''

''அங்கிள்!''



குரல் வந்த திசையை செல்வராகவனும், யோகேஷும் திரும்பிப் பார்த்தார்கள். செல்வராகவனின் முகம் சந்தோஷத்தில் மலர்ந்தது. நித்யா வந்து கொண்டிருந்தாள்.

''வாம்மா நித்யா! சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கே. யோகேஷ் இந்த விருந்தை முடிச்சுட்டு கனடா கிளம்பறான்.''

''இஸிட்..! ஹாப்பி ஜர்னி!''

''தாங்க்யூ நித்யா..''

''அங்கிள்! உங்க உடம்பு எப்படியிருக்கு? வேளா வேளைக்கு ஒழுங்காக மருந்து மாத்திரை சாப்பிடறீங்களா?''

''என்னவோ சாப்பிட்டுகிட்டுதான் இருக்கேன்மா!''

## 12

இங்கே தேவியும், விஜயசேகரும் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். தேவி சொன்னாள், ''ஸ்ருதியோட அப்பாவை நீங்க சந்தேகப்படறது கொஞ்சம் கூட நல்லாயில்லைங்க! பெத்த பெண்ணையே எந்த அப்பனாவது கொலை செய்வாங்களா? உங்க கண்டுபிடிப்பு சுத்த மடத்தனம்!''

''அடியே தேவி..! இது கலியுகக் காலம்டி. அம்மாவுக்கும் பொண்ணுக்குமே ஒத்துப் போகாத காலம் இது. எப்போ எது நடக்கும் என்றே சொல்ல முடியாது!'

''இந்த ஒரு சிவப்பு நிற பட்டனை வைத்துக் கொண்டு செல்வராகவன் அங்கிள்தான் கொலையாளி என்று எப்படி சொல்றீங்க?''

''போன் பண்ணி கேட்டு விட்டால் போச்சு!''

''போன் பண்ணி என்ன கேட்கப் போறீங்க?''

''செல்வராகவன் அங்களிடம், ஸ்ருதியோட கையில் சிவப்பு கலர் பட்டன் இருந்துச்சு.. கொலைகாரனை நான் கண்டுபிடிச்சுட்டேன்.. என்று சொல்லிப் பார்ப்போம். எதிர் முனையில் அங்கிள் தடுமாறினால்.. அவர்தான் குற்றவாளி. தெளிவாகப் பேசினால் அவர் இல்லைன்னு அர்த்தம்!''

சொல்லிவிட்டு விஜயசேகர் செல்வராகவனின் தொலைபேசிக்கு பட்டனை தட்டினான். மறுமுனையில் ரிங் சிறிது நேரம் சென்றது. பின் செல்வராகவனின் குரல் கேட்டது.

''செல்வராகவன் ஹியர்!''

''அங்கிள்! நான் விஜயசேகர்..!''

''சொல்லுப்பா..''

''அங்கிள்! ஸ்ருதியைக் கொன்றவனை நான் கண்டுபிடிச்சுட்டேன்!''

''என்னப்பா சொல்றே? நிஜமாகவா?''பரவசத்துடன் கேட்டார். விஜயசேகர் சில நொடிகள் நிசப்தமானான்.

''ஹலோ விஜயசேகர்!''



''யெஸ் அங்கிள்! ஒரு முக்கியமான துப்பு கிடைச்சிருக்கு. ஸ்ருதியின் டெட் பாடியில் அவள் கையில் ஒரு சிவப்பு கலர் பட்டன் இருந்திருக்கு.!''

''அப்படியா? அந்த சிவப்பு கலர் பட்டன் யாருடையது?''

''அதுதான் தெரியலை..''

''என்னப்பா கொலைகாரனைக் கண்டுபிடிச்சிட்டேன்னு சொன்னே..! இப்போ வெறும் சிவப்பு நிற பட்டன்தான் சாட்சின்னு சொல்றே. சிவப்பு கலர் பட்டனை வைத்து யார் கொலைகாரன் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? சரிப்பா.. இந்த இன்பர்மேஷனாவது கிடைச்சதே.. நான் ஒரு அவசர வேலையாக இருக்கிறேன், அப்புறம் பார்க்கலாம்!''

செல்வராகவன் போனை வெச்சவுடனேயே விஜயசேகர் வேக வேகமாக பீட்டரின் செல்லுக்கு நம்பரைத் தட்டினான். சொற்ப நொடியில் பீட்டர் லைனில் வந்தார்.

''இன்ஸ்பெக்டர் பீட்டர் ஹியர்!''

''ஸார்! நான் விஜயசேகர் பேசறேன்!''

''யெஸ் டெல் மீ!''

''மிஸ்டர் செல்வராகவன்தான் ஸ்ருதியைக் கொலை செய்திருக்கிறார்.''

பீட்டர் ஒரு கணம் அதிர்ந்தார்.

''வாட் டு யூ ஸே..!''

''யெஸ். செல்வராகவன்தான் உண்மையான கொலைகாரன். ஸ்ருதியை கொலை செய்துவிட்டு நாலைந்து பேர்

ரேப் பண்ணி கொலைப் பண்ணியதாக டாக்டரிடம் பத்து லட்சத்தைக் கொடுத்து போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை மாத்தி எழுதி வாங்கியிருக்கிறார். நான் போஸ்ட் மார்ட்டம் பண்ணின டாக்டரை நாலு விளாசு விளாசி உண்மையைத் தெரிஞ்சுக்கிட்டேன். டாக்டர்தான் சொன்னார். ஸ்ருதியின் கொலை பின்னணியில் முக்கியமான மல்டி மில்லேனர் இருப்பதாக. அது மட்டுமில்லை.. ஸ்ருதியின் டெட் பாடியில்.. அவள் கையில் சிவப்பு கலர் பட்டன் இருந்திருக்கு. ஸ்ருதிக்கு சிவப்பு கலர் பட்டன் என்றால் ரொம்பப் பிடிக்கும். என் டாடிக்கும் பிடிச்சதுதான் எனக்கும் பிடிக்கும் என்று சொல்லுவாள்!''

''எல்லாம் சரிதான். பெத்த அப்பனே மகளைக் கொலை பண்ண என்ன காரணம்?''

''தன் அப்பாவுக்குப் பிடித்த மாதிரிதான் ஸ்ருதி எப்போதும் நடந்து கொள்வாள். காரணம் அப்பாவின் மீதுள்ள அளவு கடந்த பாசம். ஆனால் ஊர் அறியாத விஷயம் ஒன்று. ஸ்ருதியும் யோகேஷும் கடந்த ஐந்து வருடங்களாக காதலர்களாம். இது செல்வராகவன் அங்கிளுக்கு பிடிக்கவில்லை. தனக்குப் பிடித்த மாதிரி தன் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்து வீட்டோட மாப்பிள்ளை யாக வைத்துக் கொள்ள நினைத்திருந்தாராம்.

ஆனால் யோகேஷை தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஸ்ருதி பிடிவாதமாக இருந்திருக்கிறாள். இதுநாள் வரை தான் கிழித்த கோட்டைத் தாண்டாத மகள் யோகேஷ் விஷயத்தில் மிகவும் பிடிவாதமாக இருந்ததைப் பார்த்து செல்வராகவன் அங்கிளுக்கு கடுமையான கோபம்



வந்திருக்கு. ஆனால் யோகேஷைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஸ்ருதி பிடிவாதமாக இருந்திருக்கிறாள். தினமும் இருவருக்கும் வாக்குவாதம், மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்கு. ஸ்ருதி யோகேஷின் கல்யாணத்துக்கு சரியாக பத்து நாட்களுக்கு முன்னாடி வாக்குவாதம் முத்திப் போய் செல்வராகவன் கோபத்தில் ஸ்ருதியின் கன்னத்தில் ஒரு அறை விட்டிருக்கிறார். ஸ்ருதி கண்ணாடி டீபாயின் மீது இடித்து இரத்தம் வழிந்து அங்கேயே உயிரை விட்டிருக்கிறாள். செல்வராகவன் இதை எதிர்பார்க்கவில்லை. அவரே ஸ்ருதியின் டெட் பாடியை பீச்சில் போட்டு விட்டு கேஸை திசை திருப்புவதற்காக ஸ்ருதியின் காரை அவரே கொண்டு போய் பிரின்ஸ் பிளாசாவில் விட்டிருக்கிறார். டாக்டருக்கு பத்து லட்சம் கொடுத்து ரிப்போர்ட்டை மாத்தி தரச் சொல்லி வாங்கிட்டார்!

''வெரிகுட் விஜயசேகர் வெரிகுட்! கேஸுக்கான டீடெய்ல்ஸை தெளிவாகக் கொடுத்திருக்கீங்க.. நாம இரண்டு பேரும் இப்போ நேராக செல்வராகவன் வீட்டுக்குப் போய் அவரை அரெஸ்ட் பண்றோம்!''

''ஓ.கே. இன்ஸ்பெக்டர்!''

பீட்டர் செல்போனைத் துண்டித்தார். குஷியாய் மேஜையை ஒரு தட்டு தட்டிவிட்டு எழுந்தார்.

'செல்வராகவனை இத்தனை நாளும் எப்படி சந்தேகப்படாமல் இருந்தோம்.'

## 13

''அங்கிள் போனில் யார்?''

யோகேஷ் சாப்பிட்டபடி கேட்டான்.

''விஜயசேகர் தான் பேசினான். ஒரு முக்கியமான எவிடென்ஸ் கிடைச்சிருக்காம். ஸ்ருதியின் கையில் சிவப்பு கலர் பட்டன் இருந்ததாம். அதை வெச்சு கொலை செய்தவனை கண்டுபிடிச்சுட லாம்ங்கறான். சிவப்பு கலர் பட்டனை வைத்து எப்படி?'' செல்வராகவன் இழுத்தார்.

யோகேஷ் சாப்பிடுவதை நிறுத்தினான்.

''என்ன அங்கிள் சொல்றீங்க? சிவப்பு கலர் பட்டனா? நாலைந்து பேர் ஸ்ருதியை தாக்கியிருக்காங்க... அந்த போராட்டத்திலதான் எவனோட பட்டனையோ ஸ்ருதியின் கையில் சிக்கியிருக்கு. இந்த சிவப்பு கலர் பட்டனை வெச்சு யாரை சந்தேகப்படறது?''

''நீ சாப்பிடுப்பா, சாப்பிட்டுவிட்டு எல்லா கவலையை யும் இங்கேயே இறக்கி வெச்சுட்டு கனடா கிளம்பு. அங்கே போய் நீயாவது நிம்மதியா இரு. ஸ்ருதி விஷயத்தை நாங்க பார்த்துக்கிறோம்.''

நித்யா சொன்னாள் -

''அங்கிள் சொல்வதுதான் சரி.. ஸ்ருதியை கொஞ்சம் கொஞ்சமாக மறக்க முயற்சி பண்ணுங்க. கொஞ்சம் சில்லி சிக்கன் வைக்கட்டுமா?'' என்று கோல்டன் கலரில் ஜொலித்த சில்லி சிக்கனை கரண்டி நிறைய அள்ளி



யோகேஷின் பீங்கான் தட்டில் வைக்கப் போனாள் நித்யா.. யோகேஷ் கையை குறுக்கே நீட்டி -

''நோ நித்யா! போதும்போதும்'' என்று தடுத்தான். கரண்டி யோகேஷின் கையில் தடுத்ததால் பாதி சிக்கன் யோகேஷின் ஷர்ட்டிலும் மீதி சிக்கன் டைனிங் டேபிளிலும் சிதறின. நித்யா பதறினாள்.

''ஐயம் ஸாரி.. ரியலி ஸாரி!''

''இட்ஸ் ஓ.கே. நித்யா.''

செல்வராகவன் டவலை நீட்டினார்.

''ஷர்ட்டெல்லாம் எண்ணெயாயிடுச்சு துடைச்சிக்கோ!''

யோகேஷ் அருகிலிருந்த கிண்ணத்தில் கையை கழுவி விட்டு டவலால் ஷர்ட்டை அழுத்தி துடைக்கத் தொடங்கி னான்.

நித்யா புருவத்தை சுருக்கினாள். இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. செல்வராகவனின் கையை பிடித்து மெதுவாக அழுத்தினாள். செல்வராகவன் அவளைத் திரும்பி-

''என்னம்மா?''என்றாள்.

நித்யா கைகள் நடுங்க ஆட்காட்டி விரலால் யோகேஷின் ஷர்ட்டை காட்டினாள். செல்வராகவன் அப்பொழுதுதான் கவனித்தார். யோகேஷ் அணிந்திருந்த சிவப்பு கலர் ஷர்ட்டில் மேல் சிவப்பு பட்டனைக் காணவில்லை. சின்ன

நூல் மட்டும் காற்றில் ஆடியபடி இருந்தது. யோகேஷ் ஷர்ட்டை நன்றாகத் துடைத்து விட்டு நிமிர்ந்தான்.

செல்வராகவனும் நித்யாவும் தன்னை அதிர்ச்சியுடன் பார்ப்பதை கவனித்தான். குனிந்து தன் ஷர்ட்டை பார்த்தான். மேல் பட்டன் இல்லாமல் இருந்தது.

''யோகேஷ்! நீ.. நீயா.. என் மகள் ஸ்ருதியைக் கொலை பண்ணினாய்?''

யோகேஷ் விருட்டென்று எழுந்து நாற்காலியை தூக்கி செல்வராகவனின் தலையில் போடப் போனான்.

''டுமீல்.''

திடீரென்று அவன் மணிக்கட்டில் ஏறிய தோட்டாவால் நாற்காலியை கீழே நழுவ விட்டான். பீட்டரும் விஜயசேகரும் நின்று கொண்டிருந்தார்கள்.

''பீட்டர் இவன்... இவன்தான் என் மகளை கொலை பண்ணினது... கைது பண்ணுங்க!''

பீட்டர் யோகேஷின் கைகளில் விலங்கை மாட்டினார்.

''சொல்லுடா! ஸ்ருதியை ஏன் கொலை பண்ணினே?''

''சொல்றேன்.. நடந்தது இதுதான்!''

## 14

டாப் கியரில் வந்த ஜகான் பிரின்ஸ் பிளாசாவின் முன் வந்து நின்றது. உள்ளிருந்த ஸ்ருதி ஒரு பெருமூச்சு விட்டாள்.



அப்பாடா ஒரு வழியா நித்யாவுடன் ஷாப்பிங் போறேன்னு அப்பாவிடம் பொய் சொல்லிவிட்டு யோகேஷைப் பார்க்க வந்தாச்சு..

காரை பார்க் செய்துவிட்டு இறங்கினாள். அணிந்திருந்த ஷிபான் புடவை காற்றில் படபடவென அடித்துக் கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கே யோகேஷைக் காணோம்? அவளது செல்போன் சிணுங்கியது. ஃப்ளாஷான நம்பரைப் பார்த்து சட்டென ஆன் செய்து பேசினாள்.

''யோகேஷ்! எனக்கு முன்னாடியே இங்கே இருப்பேன்னு சொன்னீங்க.. எங்கே ஆளைக் காணோம்?''

''ஸ்ருதி! இப்போ மணி ஏழரை ஆகுது. நான் எட்டரைக்கு உன் அருகில் இருப்பேன். ஒரு முக்கியமான வேலை. சீக்கிரம் முடிச்சுட்டு வந்துடறேன்!''

''வாட் யோகேஷ்! நான் என் டாடியிடம் நித்யாவுடன் ஷாப்பிங் போறேன்னு பொய் சொல்லிட்டு வந்திருக்கேன். ஒன்பது மணிக்கு நான் வீட்டில் இருக்கணும். நான் திரும்பி போயிடவா?''

''நோ ஸ்ருதி! எனக்கு உன்னைப் பார்க்கணும் போல இருக்கு. அதனால்தான் வரச் சொன்னேன். நீ என்ன பண்ணு. கார் அங்கேயே இருக்கட்டும். நேராக பக்கத்தில் இருக்கிற லோட்டஸ் ஹோட்டலுக்கு போயிடு. அங்கே ரூம் புக் பண்ணியிருக்கேன். ரூம் நம்பர் 50. நீ அங்கே போய் வெயிட் பண்ணிக்கிட்டிரு. நான் எய்ட் தர்ட்டிக்கு உன் அருகில் இருப்பேன். ஓ.கே.வாடா!''

''ஓ.கே.. ஓ.கே.. நான் உங்களுக்காக வெயிட் பண்றேன். சொதப்பாம சீக்கிரம் வந்து சேருங்க!''

''ஷ்யூர் ஸ்ருதி!''

ஸ்ருதி பார்த்தாள். இப்பவே ரூமுக்குப் போய் தனியா என்ன பண்றது? பிரின்ஸ் பிளாசாவினுள் நுழைந்தாள். கலைப் பொருட்கள், வைத்திருந்த செக்ஷனுக்கு போனாள். ஒவ்வொரு கலைப் பொருட்களும் ரம்மியமாய் இருந்தன. வெகுவாய் ரசித்தாள். நேரம் போனதே தெரியவில்லை. கையில் கட்டியிருந்த வாட்ச்சைப் பார்த்தாள். மணி எட்டரையை காட்டியது. தலையில் குட்டிக் கொண்டாள். நேரம் போனதே தெரியலையே... விரைந்து நடந்து ஹோட்டல் லோட்டஸை விசாரித்து ரூம் நம்பர் 50க்கு சென்றாள். அறை திறந்தே இருந்தது. மெதுவாக எட்டிப் பார்த்தாள். யாரையும் காணவில்லை. உள்ளே போனாள் 'க்ளிக்' கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு போய் திரும்பி பார்த்தாள். யோகேஷ் புன்னகையோடு நின்று கொண்டிருந்தான். ஸ்ருதி ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள். யோகேஷ் அவளை இழுத்து போய் கட்டிலில் உட்கார வைத்தான்.

''இந்தா ஸ்ருதி!''

ஒரு சிறிய சிவப்பு கலர் பாக்ஸை அவளிடம் நீட்டினான்.

''என்னது யோகேஷ்?''

''மை ஸ்வீட் ப்ரெஸண்ட் ஃபார் யூ!''



ஸ்ருதி ஆசையாய் அதைத் திறந்து பார்த்தாள். உள்ளே வைர மோதிரம் மின்னிக் கொண்டிருந்தது.

''திஸ் இஸ் டைமண்ட் ரிங்! என் ஞாபகமாக விரலில் போட்டுக்கோ... குடு.. நானே போட்டு விடறேன்!''

''வேண்டாம் யோகேஷ்... இப்பவே போட்டுக்கிட்டா டாடி எங்கிருந்து, எப்படி வந்ததுன்னு சந்தேகப்படுவார். அதனால் நம்ம கல்யாணத்துக்கு பிறகு போட்டுக்கறேன்.''

''ஏன் ஸ்ருதி உன் அப்பா இப்படி இருக்கிறார்?''

''எப்படி இருக்கிறார்?''

''நம்ம ரெண்டு பேரையும் சந்திக்க விடமாட்டேங் கிறாரே!''

''அந்தக் காலத்து மனுஷன். கல்யாணத்துக்குப் பிறகுதான் எல்லாம் என்ஜாய் பண்ணனும் என்று நினைக்கிறார். நல்ல விஷயந்தானே. நாமதான் தினமும் போனில் மணிக் கணக்கா பேசிக்கறோமே... இது போதாதா உங்களுக்கு?''

''நீ ரொம்ப நல்ல பொண்ணு என்று உன் அப்பா நினைச்சுக்கிட்டிருக்கிறார்... ஆனா நீ திருட்டுத்தனமா என்னை எத்தனை தடவை வந்து பார்த்திருப்பே..''

செல்லமாக அவள் கன்னத்தை கிள்ளினான். ஸ்ருதி யோகேஷின் தலையில் குட்டினாள்.

''அய்யா ரொம்ப யோக்கியம்?'' இருவரும் சிரித்தார்கள். கொஞ்ச நேரம் காதல் வசனம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று விளக்கு, ஏ.சி. எல்லாம் அணைந்து போனது. ஸ்ருதி பயத்தில் யோகேஷின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''என்னாச்சு யோகேஷ்?''

''பவர் கட். பயப்படாதே! இப்ப வந்திடும்!'' - அந்த இருட்டும், நீல நிற ஷிபானில் ஸ்ருதியின் அழகும், அவள் சூடியிருந்த மல்லிகையின் மணமும் யோகேஷை ரம்மியமாக மயக்கியது. அவள் நெருக்கமும், அவள் பட்டு கையில் தன் கரத்தை பற்றியிருந்ததும் யோகேஷுக்கு உணர்ச்சியைத் தூண்டியது. ஸ்ருதியை மெதுவாக கட்டிலில் சாய்த்தான்.

''டிங் டாங்.. டிங் டாங்..'' அறையிலிருந்த கடிகாரம் மணி ஒன்பதாகி விட்டதைக் காண்பித்தது. ஸ்ருதி யோகேஷை உதறி விட்டு விசுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். விளக்குகளும் பளிச் சென்று எரியத் தொடங்கின. ஏ.சி.யின் குளுமையும் கொட்டத் தொடங்கியது. நல்ல தருணத்தில் ஸ்ருதி எழுந்ததால், யோகேஷின் வேகம் இன்னும் அதிகரித்தது. அவளை வெறியோடு நெருங்க...

''நோ யோகேஷ்.! கல்யாணத்துக்கு முன்னால் இந்த தப்பெல்லாம் வேண்டாம்.''

அவள் கூறியது எதுவும் யோகேஷின் காதில் விழவில்லை. வெறியோடு நெருங்கப் போனான். ஸ்ருதி அவனது ஷர்ட் காலரை இறுக்கமாகப் பற்றியபடி தடுத்துக் கொண்டிருந்தாள்.. போராடினாள்.. பிறகு கத்தத் தொடங்கினாள்...



''ஹெல்ப்.. ஹெல்ப்... யாராவது சீக்கிரம் வாங்க..''

ஸ்ருதி பெருங்குரலெடுத்து கத்தத் தொடங்க, யோகேஷின் கோபம் தலைக்கேறியது.

''இப்ப என்ன பண்ணிட்டேன்னு இந்த கத்து கத்தறே!'' கோபத்தில் ஸ்ருதியின் கன்னத்தில் பளாரென ஓங்கி ஒரு அறை விட்டான்.

ரோஜா பூவை குழந்தை சுண்டினால் கூட இதழ்கள் எல்லாம் உதிர்ந்து உதிர்ந்து போய்விடும்.

ஸ்ருதியின் தலை பேச்சு மூச்சில்லாமல் ஒரு பக்கமாக சாய்ந்தது. யோகேஷ் திகிலோடு எழுந்து உட்கார்ந்தான். கொஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''ஸ்ருதி.. ஸ்ருதி..!''

அவளது கன்னத்தைத் தட்டினான். எந்த ரியாக்ஷனும் இல்லை... நாசியின் அருகே கையை வைத்துப் பார்த்தான்.

''நோ.. நோ.. நானே என் ஸ்ருதியைக் கொன்று விட்டேனே.. ஸ்ருதி.. ஸ்ருதி..'' அவள் கையை எடுத்து மார்பில் வைத்துக் கொண்டான்.

''நானே உன்னைக் கொன்று விட்டேனே.. நான் ஒருபாவி... உன்னைக் கொன்ற மிருகம், என்னை மன்னிப் பாயா ஸ்ருதி'' பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினான். அரை மணி நேரம் கடந்தது. மணியைப் பார்த்தான். ஒன்பதரையைக் காட்டியது. ஸ்ருதியைப் பார்த்தான். கசங்கியப் பூவாய் துவண்டு கிடந்தாள்.

நான்தான் ஸ்ருதியைக் கொலை செய்தேனென்று ஊர் உலகத்துக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் என்னைக் காறித் துப்புவார்கள். ஸ்ருதிக்கு கொடுத்த வைர மோதிரம் பாக்ஸிலிருந்து தனியாக ஸ்ருதியின் அருகே கிடந்தது. மோதிரத்தை எடுத்து பாக்ஸில் வைத்து தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான். அவளுடைய மொபைலை யும் எடுத்துக் கொண்டான். ஸ்ருதியின் உடலெங்கும் தன் நகங்களால் கீறினான். வேக வேகமாய் செயல்படத் தொடங்கினான்.

ஸ்ருதியை ஒருக்களித்து படுக்க வைத்து பெட்ஷீட்டால் கழுத்து வரைமூடினான். திரைச் சீலையை சரி செய்து விட்டு ஆடியோ செட்டில் லேசாய் கேட்கும்படி ஒரு இசையை போட்டுவிட்டு, லைட்டை அணைத்துவிட்டு, நைட் லேம்ப்பை ஆன் செய்தான். ரூமை லாக் பண்ணிட்டு கீழே ரிசப்ஷனிஸ்டிடம் வந்தான்.

''எக்ஸ்யூஸ் மீ! எனக்கு ஒரு அர்ஜண்ட் கால் வந்திருக்கு. போயிட்டு இப்போ கொஞ்ச நேரத்தில் வந்துடுவேன். என் கேர்ள் ப்ரெண்ட் ரூமில் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருக் கிறாள். தயவு செய்து அவளை யாரும் கொஞ்ச நேரத்துக்கு டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.''

''ஓ.கே.ஸார்!''

யோகேஷ் வெளியே வந்தான். சிகரெட்டைப் பற்ற வைத்தான். ஸ்ருதியின் பாடியை என்ன செய்வது? இப்படியும் அப்படியுமாக நடந்தான். யோகேஷுக்கு பைத்தியம் பிடிப்பது போல் இருந்தது. தலையை சிலுப்பிக் கொண்டான். வெளியே நாற்காலியில் அமர்ந்தான். நேரம் ஆக ஆக ஆள் நடமாட்டம் குறையத் தொடங்கியது. யோகேஷுக்கு சட்டென்று அந்த யோசனை பளிச்சிட்டது. மீண்டும் ரூமுக்கு வந்தான். லைட்டை ஆன் செய்தான். அறையை ஒழுங்குபடுத்தினான்.



ஸ்ருதியின் உடல் சில்லென்றாகி விறைக்க ஆரம்பித் திருந்தது. மெதுவாக அவளை நிற்க வைத்து அவள் கையை யோகேஷின் கழுத்தில் போட்டு அவளது இடுப்பை இறுகப் பற்றியபடி வெளியே வந்து ரூமை லாக் செய்து கீயை எடுத்துக் கொண்டான். தான் அணிந்திருந்த கூலிங் கிளாஸை அவளுக்கு அணிவித்தான்.

கைத்தாங்கலாக மெதுவாக அவளை இழுத்துக் கொண்டு நடக்கலானான்.

ரிசப்ஷனிஸ்ட் ஸ்ருதியைப் பார்த்து புருவத்தை தூக்கினாள்.

''ஸார் உங்க ஒய்ஃபுக்கு என்னாச்சு?''

''அப்பப்ப செஸ்ட் பெயின் வரும். இப்பவும் அது மாதிரி வந்து மயக்கமாயிட்டா.. அதான் ஹாஸ்பிடல் வரைக்கும்..''

''மே ஐ ஹெல்ப் யூ ஸார்?''

''நோ தாங்க்ஸ்.''

வரவேற்பு அறையில் இருந்தவர்கள் அனைவரும் தன்னையே கவனிப்பது போலிருந்தது. யோகேஷ் காஷுவலாக இருக்க முயன்றான்..

''ம்.. பாத்து வா.. கொஞ்ச நேரத்துல ஹாஸ்பிடலுக்குப் போயிடலாம்.''

ஸ்ருதியின் டெட் பாடியிடம் பேச்சு கொடுத்தபடி வந்து காரின் பின் இருக்கையில் அவளைப் படுக்க வைத்து வேகமாய் காரை பீச்சுக்கு செலுத்தினான். பீச்சில் அந்த நள்ளிரவில் சுத்தமாய் ஆள் நடமாட்டம் இல்லை. ஸ்ருதியின் டெட் பாடியை கரையோரமாக வீசிவிட்டு திரும்பி பார்க்காமல் காரை சல்லென எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

பீட்டர், செல்வராகவன், நித்யா அனைவரும் யோகே ஷையே ஸ்தம்பித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தனர். யோகேஷ் ஒரு பெருமூச்சு விட்டான்.

''இதுதான் நடந்தது.''

பீட்டர் யோகேஷின் கையில் விலங்கை மாட்டி ஜீப்பில் ஏற்றினார். செல்வராகவன் மாலையை அணிந்து கொண்டு புன்னகை பூத்துக் கொண்டிருந்த ஸ்ருதியின் போட்டோ வைப் பார்த்து பலமாகச் சிரித்தார், நித்யா கேட்டாள்.

''அங்கிள் என்ன சிரிக்கிறீங்க?''

''ஸ்ருதி நம்ம நாட்டு பண்பாட்டையும், கலாச்சாரத் தையும் மதிச்சிருக்கா. கடைசி நிமிடம் வரை விட்டுக் கொடுக்கலை பாரு. அதை நினைச்சா பெருமையா இருக்கும்மா!''

ஸ்ருதி புன்னகைத்தபடியே தன் அப்பாவைப் பார்த்து, உங்க பாராட்டுக்கு நன்றிப்பா என்று சொல்வது மாதிரி இருந்தது.

★

# ஹரிணி காத்திருந்தாள்

## 1

''நவ் ஆதித்யா வில் ப்ரெசண்ட் எ டான்ஸ் ப்ரோக்ராம்.''

கல்லூரி மாணவி ஆடிட்டோரியத்தில் மைக்கில் அறிவித்து விட்டு நகர, ஆதித்யா மேடையில் தோன்றும் முன்பே 'உய்.. உய்.. உய்..' என விசில் சத்தமும் கைதட்டல்களும் ஆடிட்டோரியத்தை அதிர வைத்தது.

'மன்மதராசா, மன்மதராசா கன்னி மனசை கிள்ளாதே' என்ற பாடல் மைக்கில் அதிர ஆரம்பிக்க ஆதித்யா கலக்கலாக நடனமாடத் தொடங்கினான். மாணவர்களும் மாணவிகளும் அவரவர் இடத்தில் இருந்தபடியே கும்பல் கும்பலாக கும்மாளம் போடத் தொடங்கினார்கள். மாணவிகள் சிலபேர் அவனின் அழகில் லயித்து போயிருந்தார்கள்.

''ஆதித்யாவுடைய மவுசு நாளுக்கு நாள் அதிகமாயிட்டு வருது, எவ்வளவு சூப்பரா ஹீரோ மாதிரி இருக்கான் பாருடி. நாள் பூரா பாத்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு.

அவன் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டால் என்னை விட அதிர்ஷ்டசாலி யாரும் இருக்க முடியாது.''

ஒரு மாணவி மெய்மறந்து அவனைப் பற்றி பேசிக் கொண்டிருந்தாள்.

''ஏய் மெதுவா பேசுடி ஹரிணி காதில் விழப் போகுது. அப்புறம் சண்டைக்கு வரப் போறா!''

''என்னடி சொல்றே?''

''ஆமாடி, ஆதித்யாவுடைய கடைக்கண் பார்வை நம் மீது விழாதானு நம்ம காலேஜ் கேர்ள்ஸ் எல்லாம் தவம் கிடக்கிறாங்க. ஆனா அடித்தது அதிர்ஷ்டம் ஹரிணிக்குத் தான். இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் தீவிரமாய் காதலிக்கிறாங்க.''

''சரிப்பா, அடுத்த ஜென்மத்திலாவது ஆதித்யாவுக்கு மனைவியா அமைகிற பாக்கியம் கிடைக்குதானு பார்க்கலாம். மாணவிகளின் உரையாடல் ஆதித்யாவின் நடனத்தில் லயித்திருந்த ஹரிணியின் காதில் துல்லியமாய் விழுந்தது.

''ஆதித்யா, மை டியர் ஆதித்யா எத்தனை பெண்கள் உனக்காக கியூவில் நிற்கிறார்கள். நான் எந்த விதத்தில் உன்னைக் கவர்ந்தேன்? என்னை துரத்தி துரத்தி காதலித்த அந்த பசுமையான நாட்கள்... மறக்க முடியுமா? ஐ லவ் யூ ஆதித்யா.. ஐ லவ் யு.. ஸோ மச்!''

ஆதித்யாவின் ப்ரோகிராம் முடிவடைந்தது. அத்தனை கூட்டமும் அவனை சூழ்ந்துக் கொண்டது. அவனை



வெகுவாக பாராட்டி கை குலுக்கினார்கள். ஒரு சிலர் ஆட்டோகிராப் கூட வாங்கினார்கள். ஆதித்யா அனைவரின் பாராட்டையும் அன்போடு ஏற்றுக் கொண்டான். பின்பு கூட்டத்தை எல்லாம் விலக்கிக் கொண்டு நேரே ஹரிணியிடம் வந்தான். அவளை குறுகுறுப்போடு பார்த்தான். அவளது முகம் வாட்டமாக இருந்தது. அவளை தனியே அழைத்துப் போனான்.

''ஹரிணி ஏன் டல்லாக இருக்கே?''

''நாளைக்கு உங்களைப் பிரிய போறதை நினைச்சா ரொம்ப வேதனையாயிருக்கு ஆதித்யா!''

''என்னுடைய ஸ்டடிஸ் முடிஞ்சிடுச்சு. நான் இந்தக் காலேஜை விட்டுப் போகத்தான் செய்யணும். மேலே கொஞ்சம் படிச்சிட்டு ஒரு நல்ல வேலையில் உட்கார்ந்த பிறகு நம்ம கல்யாணம்தான்!''

''சொல்லும் போது நல்லா இருக்கு ஆதித்யா. எல்லாம் நல்ல படியா நடக்குமா ஆதித்யா. என்னுடைய படிப்பு முடிய இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கிறதே. நீங்க இல்லாம இந்த இரண்டு வருடத்தை எப்படி கழிக்கப் போகிறேனோ, தெரியலையே..''

''தினமும் ஐஸ்கிரீம் பார்லர் போய் ஐஸ்க்ரீம் சாப்பிடு. சில்லென்ற ஐஸ்க்ரீம் உன் உதட்டில் படும்போது, நான் உன் அருகில் இருப்பது போல் இருக்கும். இதோ இந்த போகன்வில்லா மரத்திற்கு கீழே மாலை ஆறு மணியானதும் வந்து அமர்ந்து கொள். இதில் இருந்து உதிரும் பூக்கள் உன் மேல் படும்போது என்னை நினைச்சுக்கோ. நாம சந்தித்து

பேசின இடங்கள், சந்தோஷமாக சிரித்த தருணங்கள், சின்ன சின்ன ஊடல்கள் போன்ற எல்லா பசுமையான நினைவுகளை நினைத்துப் பார்த்துக் கொண்டே இரு. நான் உன் அருகில் இருப்பது போல இருக்கும். அதற்குள் இரண்டு வருடமும் ஓடிவிடும்!''

ஹரிணி கண்கள் பனிக்க ஆதித்யாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''ஐ லவ் யூ.. ஸோ மச் ஆதித்யா.. நீங்க இல்லாத வாழ்க்கையை என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியாது!''

## 2

''ஹரிணி நானும் ஒரு வாரமாக பார்த்துட்டு இருக்கேன். யார் கூடவும் பேசாம எப்பவும் தனியா புக்கும் கையுமா இருக்கே!'' அம்மா தனபாக்கியம் கேட்டாள்.

''எக்ஸாம்ஸ் ஆரம்பிக்கப் போகுதுல. அதான் பயமா இருக்கும்மா!''

''உன் முகத்தைப் பார்த்தால் பயந்த மாதிரி தெரியலை. எதையோ பறிகொடுத்துட்டு அதற்காக ஏங்கி தவிக்கிற மாதிரி தெரியுது!''

''பொண்ணை நிம்மதியா படிக்கவிடு தனம். நீ நல்லா படிச்சு பர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணும்மா. நீ நானு அவனவன் போட்டி போட்டுக்கிட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க க்யூவில் நிக்கணும்!''



அப்பா கதிரேசன் சொல்லிவிட்டு பலமாக சிரித்துக் கொண்டார்.

''அப்பா...''

ஹரிணி மெதுவாக அழைத்தாள்.

''என்னம்மா?''

''எனக்கு மேலே படிக்கணும்னு ஆசையா இருக்கு. நான் படிக்கட்டுமாப்பா?''

''உன்னை மேலே படிக்க வைக்க நமக்கு வசதி இல்லையேம்மா... உனக்கு கீழே இரண்டு தங்கைகள் வேற இருக்காங்க.. உன் படிப்பு முடிவடைந்ததும் உனக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சுடுவேன். அப்புறம் உன் தங்கைகளுக்காக உழைக்கணும். தப்பா எடுத்துக்காதேம்மா!''

''சரிப்பா!''

''ஸார் போஸ்ட்...''

கதிரேசன் சென்று போஸ்ட்மேனிடம் கடிதத்தை பெற்றுக் கொண்டு வந்தார்.

''ஹரிணி உனக்குதாம்மா லெட்டர்'' என்றபடி கவரை திருப்பி திருப்பிப் பார்த்தார்.

''ப்ரம் அட்ரஸ் காணோம்!'' என்று கடிதத்தை அவளிடம் கொடுத்தார்.

அப்பாவிடமிருந்து கடிதத்தை வாங்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்று படிக்கலானாள்.

''ஹரிணி டியர், எப்படி இருக்கே? நான் சொன்ன மாதிரி இரண்டு வருடங்கள் சீக்கிரமாக ஓடி விட்டன அல்லவா? இன்னும் சில நாட்கள் தானிருக்கு உன்னுடைய ஸ்டடிஸ் முடியவடைய. எக்ஸாமிற்கு நல்லா படி. என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருக்காமல் பரீட்சையில் கவனம் செலுத்து. நம்ம விஷயத்தை என் வீட்டில் சொல்லிட்டியா? எக்ஸாம்ஸ் முடிந்த பிறகு மைசூருக்கு எக்ஸ்கர்ஷன் போகப் போவதாகக் கூறியிருந்தாய். ஸாரி டியர்லீவு எடுத்துக் கொண்டு என்னால வர முடியாது. ஹாப்பி ஜர்னி! இங்கு என் வேலை அமோகமாக இருக்கிறது. கை நிறைய சம்பளம்... என் சம்பள கவரை உன் கையில் ஒப்படைக்கும் நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன். என்றும் உன் நினைவாக ஆதித்யா!''

ஆதித்யாவின் கடிதத்துக்கு மென்மையாய் ஒரு முத்தமிட்டாள். பின் கடிதத்தை மடித்து ஏற்கனவே அவன் கத்தை கத்தையாய் அனுப்பியிருந்த கடிதங்களுக்கு மத்தியில் வைத்தாள். இரண்டு கைகளை பரபரவென தேய்த்துக் கொண்டாள். மைசூருக்கு போயிட்டு வந்த பிறகு என் காதல் விவகாரத்தை அப்பா அம்மாவிடம் சொல்லிடணும் என நினைத்துக் கொண்டாள்.

ஹரிணி பரீட்சையை நன்றாக எழுதி முடித்தாள். எக்ஸாம் முடிந்த சில நாட்களிலேயே தோழிகளுடன் மைசூர் சென்றாள். ஊரும் க்ளைமேட்டும் ஹரிணிக்கு மிகவும் பிடித்துப் போனது. குறிப்பாக மைசூர் பேலசை பார்த்து பிரமித்துப் போனாள்.



''வாவ் வாட் எ ப்யூட்டிபுல் சையிட்!'' கண்கள் அகல ஒவ்வொரு சிற்பங்களையும் அதன் வேலைப்பாடு களையும், நுணுக்கங்களையும் பார்த்து வியந்து போனாள்.

மாணவிகள் அவரவர் தோழிகளுடன் கூட்டம் கூட்டமாக அரண்மனையைச் சுற்றி பார்த்துக் கொண்டிருந் தார்கள். ஹரிணி மட்டும் அவர்களிலிருந்து தனியாக வந்து அரண்மனையை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

'இது மாதிரி அரண்மனையில் என் ஆதித்யாவுடன் குடும்பம் நடத்த வேண்டும். அரண்மனை முழுக்க நிரம்பி வழிய வழிய குழந்தை குட்டிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.' தான் கற்பனை செய்ததை நினைத்துப் பார்த்து சிரித்துக் கொண்டாள்.

''என்ன ஹரிணி தனியாக சிரிச்சுக்கிட்டிருக்கே?'

ஆண் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். புன்னகை யுடன் வாட்டசாட்டமாக ஒரு இளைஞன் நின்றுக் கொண்டிருந்தான். கோதுமை நிறத்துடன் நல்ல உயரமாக இருந்தான்.

''யா... யார். நீங்க?''

''என் பேர் சித்தார்த் உன் அத்தைப் பையன்!''

''அத்தை பையனா?''

''உன் அப்பாவோட தங்கச்சி பையன். உங்க அப்பாவுக்கும் என் அப்பாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இரண்டு குடும்பமும் காலகாலமாக எந்தவித ஒட்டுதலும் இல்லாம இருக்கு.''

''ஆமா அப்பா கூட சொல்லியிருக்காங்க. உன் அத்தையிடம் பேசி பல வருஷங்கள் ஆச்சுனு நீங்க எப்படி என்னை அடையாளம் கண்டுகிட்டீங்க? நாம சின்ன வயசில் பார்த்ததுதானே?''

''சின்ன வயதில் நம்ம இருவரையும் உனக்கு நான் எனக்கு நீ என்று பெரியவங்க நம் மனசில் பச்சை குத்திட்டாங்க. காலப்போக்கில் எல்லோரும் இதை மறந்திருக்கலாம். ஆன நான் மறக்கலை. உன்னை என் மனதில் ஆழமாக நட்டு வெச்சு மானசீகமாக உன்னைக் காதலிச்சிக்கிட்டு வர்றேன். உன் அப்பா அம்மாவிடம் இதைப் பற்றி பேசு. கண்டிப்பாக ஓகே சொல்லுவாங்க. என் கம்பெனியில் எவ்வளவோ வேலைகள் தலைக்கு மேலே இருக்கு. இருந்தாலும் உன்னைப் பார்க்கவே எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு மைசூருக்கு ஓடி வந்திருக்கேன். ஐ லவ் யூ ஹரிணி! ஐ லவ் யூ ஸோ மச்!''

மனதிலிருந்தவையை கொட்டி விட்டு சித்தார்த் அசுர வேகத்தில் கிளம்பிப் போய்விட்டான்.

ஹரிணி இமைக்க மறந்து ஆணி அடித்தாற் போல அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

''அப்பா சித்தார்த்தாம்பா நம்ம அத்தை பையனாம். என்னமோ ஏற்கனவே பழகின மாதிரி என்னைப் பார்த்ததும் வளவளன்னு பேசிகிட்டே இருந்தாம்பா.''

மைசூரிலிருந்து வந்த பிறகு சித்தார்த் பற்றி அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் ஹரிணி. கதிரேசனின் முகம் சட்டென மலர்ந்தது.



''அட நம்ம கற்பகத்தோட பையனா? சின்ன வயசில் பார்த்தது இப்போ ஆள் வாட்டசாட்டமாக வளர்ந்து இருப்பானே எப்படிம்மா இருக்கான்?''

''என்னப்பா நீங்க அவங்க கூட நமக்கு பேச்சுவார்த்தை கிடையாது. அவனை பற்றி இவ்வளவு அக்கறையாய் விசாரிக்கிறீங்க?''

''தான் ஆடலைன்னாலும் தன் தசை ஆடும்னு சொல்லுவாங்களே. அதான். அவர் தங்கச்சி பையனாச்சே விட்டுக் கொடுப்பாரா?''

''தனபாக்கியம் கற்பகத்திற்குப் போனைப்போடு. என் தங்கச்சி கூட நான் பேசணும்!''

''எதுக்குங்க உறவு விட்டு எத்தனையோ வருஷமாச்சு. இப்போ போய் என்னத்தைப் பேசப் போறீங்க?''

''ஆயிரம் இருந்தாலும் அவ என் தங்கச்சி இல்லியா. பெரியவங்க நாமதான் பழசை எல்லாம் மறந்துட்டு விட்டுக் கொடுத்துப் போகணும்!'' சொல்லிவிட்டு வேகமாய் போய் தொலைபேசியை எடுத்து தானே டயல் செய்தார். எதிர் முனையில் மணி அடித்து ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ நான் கதிரேசன் பேசறேன்'' என்றார் உற்சாகமாய். எதிர்முனையில் பலத்த நிசப்தம். ''ஹலோ நான் கதிரேசன் பேசறேன் யார் பேசறது? கற்பகம் இருக்காளா?''

''அ.. அண்ணா நீங்களா என்னாலே நம்பவே முடியலை. இத்தனை வருஷத்துக்கு பிறகு இந்த தங்கச்சியோட

ஞாபகம் இப்பதான் வந்ததா? எப்படிண்ணா இருக்கீங்க? அண்ணி குழந்தைங்க எல்லாம் எப்படி இருக்காங்க?''

அவளது குரலிலும் அந்த உற்சாகம் அப்பட்டமாய் தெரிந்தது.

''இங்க எல்லோரும் சௌக்கியம்மா. நீ எப்படிம்மா இருக்கே? மாப்பிள்ளை இருக்காரா?''

''இருக்காருண்ணா... என்னங்க இங்க வாங்க.. எங்க அண்ணன் பேசறார். உங்களைத்தான் கூப்பிடுகிறார்'' என்று அவள் அழைக்கும் குரல் போனில் கேட்டது. வேலாயுதம் விரைந்து வந்து போனை வாங்கி சந்தோஷமாக,

''ஹலோ'' என்றார்.

''என்ன மாப்ள எப்படி இருக்கீங்க?''

''நல்லா சௌக்கியம். நீங்க எப்படி இருக்கீங்க?''

''நானும் நல்லாதான் இருக்கேன். நாம பழசை எல்லாம் மறந்துட்டு நீங்க பழையபடி நம்ம வீட்டுக்கு வந்து போகணும். எப்போ வர்றீங்க?''

''வர்றோம் மச்சான். திடீரென ஒரு நாள் வந்து நிப்போம். நீங்க பேசினது ரொம்ப சந்தோஷம்.. ரொம்ப சந்தோஷம்!''

கதிரேசன் உற்சாகத்தில் வெகு நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். ஹரிணி தன் அம்மாவிடம் வந்தாள்.



''அம்மா, அப்பாவுக்கும் அத்தைக்கும் என்ன சண்டை? இத்தனை வருஷமாக ஏன் ஒருவருக்கொருவர் பேசிக்காம இருந்தாங்க?''

''உன் அப்பாவுடைய ஒரே தங்கச்சி கற்பகம் அத்தை. என் மாமியார், மாமனார் இறந்த பிறகு தங்கச்சிக்கு செய்ய வேண்டிய கடமைகள் உன் அப்பாவின் தலைமேல். உன் அப்பாவும் நல்லாதான் கவனிச்சார். ஆனா உன் மாமாவுக்கு அதான் கற்பகத்தோட புருஷனுக்கு கொஞ்சம் ஆசை அதிகம். அது வேணும், இது வேணும் என்று அடுத்தடுத்து அப்பாவைப் போட்டு நெறிக்க ஆரம்பிச்சிட்டார். தொல்லை தாங்க முடியாமல் ''உனக்கு நான் நிறைய சீர் பண்ணியாச்சு. இனிமேல் இது வேணும் அது வேணும் என்று என் வீட்டு வாசல் படியில் வந்து நிக்காதே.'' உன் அப்பா ஒரு வேகத்தில் சொல்லிட்டார். மாமன்காரன் ரோஷக்காரன். அப்பா சொன்ன வார்த்தையை இன்னிக்கு வரைக்கும் காப்பாத்திட்டு வர்றான். இப்போ நம்மளை விட உன் அத்தை குடும்பம் பல மடங்கு வசதியாக இருக்காங்க!''

ஹரிணி கண்கள் அகல கேட்டுக் கொண்டிருந்தாள். புதிய உறவு இந்த வீட்டிற்குள் முளைக்கப் போகுதா? சித்தார்த் அவளிடம் பேசினதை சுத்தமாய் மறந்து போயிருந்தாள்.

## 3

தன் வீட்டின் வாசலில் உயர் ரக கார் வந்து நிற்பதை கண்டு யாரென்று எழுந்து போய் பார்த்தார் கதிரேசன். காரிலிருந்து

இறங்கியவர்களைக் கண்டு சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனார்.

''அடடே வாங்க வாங்க யேய் தனம்... யார் வந்திருக் காங்க பாருடி.''

கதிரேசனின் குரல் கேட்டு யார் வந்திருப்பார்கள் என்ற வியப்பில் தனபாக்கியமும் ஹரிணியும் இரு தங்கைகளும் விரைந்து வந்து பார்த்தார்கள். கற்பகம் அவள் குடும்பத் தோடு வந்திருந்தாள்.

''இப்படி குடும்பத்தோடு வந்து எங்களை திக்கு முக்காட வைப்பீங்கனு நினைச்சுக் கூடப் பார்க்கலை மாப்பிள. அடடே இவன்தான் உன் பையனா?''

''ஆமா மச்சான். ஆள் எப்படி வளர்ந்திருக்கான் பாருங்க. பேரு சித்தார்த். சொந்தமாக கம்பெனி வைச்சிருக்கான். வருமானம் பல தலைமுறைக்கு வரும்ல'' வேலாயுதம் பெருமையுடன் சொல்லிக் கொண்டார்.

கற்பகம் தனபாக்கியத்திடம் வந்தாள்.

''அண்ணி, எப்படி இருக்கீங்க? இவங்க தான் உங்க பொண்ணுங்களா?''

''ஆமா கற்பகம். இவ மூத்தவ ஹரிணி. வரன் பார்க்க ஆரம்பிச்சாச்சு. இவ இரண்டாவது ரமணி. இவ மூணாவது தரணி!''

''மூன்று பேரும் முப்பெரும் தேவியர் மாதிரி இருக்காங்க!''



''சரி சரி மசமசனு பேசிக்கிட்டிருக்காம சமையலை ரெடி பண்ணு தனம். ரொம்ப நாளைக்கப்புறம் வந்திருக்காங்க. கறி பிரியாணியும், கோழி வறுவலும் ரெடி பண்ணு. ஹரிணி நீ சாயந்தரத்துக்கு நெய் மணக்க கேசரியும் வடையும் ரெடி பண்ணும்மா!''

''சரிப்பா..''

யாரோ தன்னையே வச்ச கண் எடுக்காமல் பார்ப்பது தெரிந்தது. யாரென்று பார்த்தாள். சித்தார்த் ஹரிணியையே குறுகுறுப்பாக பார்த்துக் கொண்டிருந்தான். பல வருடங்களுக்குப் பிறகு பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேர்ந்திருந்ததால் ஒரே அரட்டையும் கும்மாளமுமாக இருந்தது. மதிய உணவை ஒரு பிடி பிடித்துவிட்டு ஹரிணியும் சித்தார்த்தையும் தவிர அனைவரும் ஆழ்ந்து உறங்கத் தொடங்கினர். யாருக்கும் கேட்காதவாறு ஹரிணியை சித்தார்த் மெதுவாக அழைத்தான்.

''என்ன?'' என்றாள்.

''கொஞ்சம் தோட்டத்துக்கு வாயேன்!''

ஹரிணி எழுந்து போனாள்.

''என்ன வேணும்?'' எனக் கேட்டாள்.

''நான் வந்து எவ்வளவு நேரமாகுது. ஏன் என்கிட்டே பேசவேயில்லை? என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா?''

''உங்களிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

''எது வேணும்னாலும் பேசு. நீ பேசினால் நாள் பூரா கேட்டுக்கிட்டே இருக்கலாம். நல்லா சமைப்பியா ஹரிணி?''

''ம்!''

''ஏன் வெட்கப்படறே ஹரிணி?''

''அய்யோ வெட்கமாவது மண்ணாங்கட்டியாவது என்னைக் கொஞ்சம் ஆளை விடுறீங்களா தலையை வலிக்குது!''

ஹரிணி வெறுப்புடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''இந்தா ஹரிணி!''

ஹரிணி என்னவென்று திரும்பிப் பார்த்தாள். அவன் கையிலிருந்ததைப் பார்த்ததும் அவளது முகம் தௌஸண்ட் வால்ட் பல்பானது. சித்தார்த்தின் கையில் ஐஸ்க்ரீம் கப்! ஐஸ்க்ரீமைக் கண்டதும் அவளுக்கு ஆதித்யாவின் ஞாபகம் வந்தது. ஒரு நாளைக்காவது நூறு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்து அவளது மனதைக் குளிர வைப்பான். வேகமாய் அவனிடமிருந்து பிடுங்கி எதைப் பற்றியும் சிந்திக்காமல் சுவைக்கத் தொடங்கினாள். அவள் சுவைப்பதை வெகு அருகில் அமர்ந்துக் கொண்டு ரசித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்.

ஹரிணி பிறகுதான் சிந்தித்தாள்.

சித்தார்த் கொடுத்த ஐஸ்க்ரீமை நான் ஏன் ஆசையாக சுவைக்க வேண்டும். ஐஸ்க்ரீம் கப்பை அவனருகில் வைத்துவிடடு எழுந்து ஓடப் போனவளின் கையை



சட்டென பற்றி, ''மீதி ஐஸ்க்ரீமை யார் சாப்பிடுவது?'' எனக் கேட்டான்.

ஹரிணி அவனைப் பார்த்து முறைத்துவிட்டு, அவனது கையை உதறி விட்டு, உள்ளே ஓடி விட்டாள். அவள் சென்ற பிறகு அவள் எச்சில் பண்ணிய மீதி ஐஸ்க்ரீமை உற்சாகமாய் சுவைக்கத் தொடங்கினான் சித்தார்த்.

அவளறைக்கு சென்ற பிறகு ஹரிணியின் உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. சித்தார்த் ஏன் இப்படியெல்லாம் நடந்துக் கொள்கிறான்? இவ்வளவு தீவிரமாய் என்னைக் காதலிக்கிறானே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

## 4

ஹரிணி தனது தோழி விசாலிக்கு போன் பண்ணினாள். நடந்தது எல்லாவற்றையும் கடகடவென கொட்டினாள்.

''என்ன விசாலி சொல்றே?''

''ஆமா ஹரிணி நீ ஆதித்யாவை காதலிக்கும் விஷயத்தை உன் அத்தை பையனிடம் சொல்லிவிடு. இல்லையென்றால் விஷயம் விபரீதம் ஆகிவிடும்!''

''நான் ஆதித்யாவை காதலிக்கும் விஷயத்தை சித்தார்த்திடம் சொன்னால் அவன் என் அப்பாவிடம் போட்டுக் கொடுத்து விடுவானே!''

''என்னிக்கு இருந்தாலும் உன் அப்பா அம்மாவிற்கு விஷயம் தெரியத்தான் போகிறது. அது சித்தார்த் மூலம் தெரிந்தால் என்ன? நீ யாரையும் காதலிக்கவில்லை என்கிற தைரியத்தில் தான் சித்தார்த் உன் பின்னாடியே சுற்றி சுற்றி வருகிறான். அதனால் எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லிவிட்டால் உனக்குத்தான் நல்லது!''

''சரி விசாலி!''

விசாலியிடம் பேசிவிட்டு ரிஸீவரை சாத்தினாள். மனம் சற்று லேசாகியிருந்தது.

லேப்டாப்பை வைத்துக் கொண்டு வேலையில் மூழ்கியிருந்த சித்தார்த்தை மெதுவாக அழைத்து தோட்டத்திற்கு வருமாறு சைகையால் தெரிவித்தாள். அவள் அழைத்ததும்தான் தாமதம் சித்தார்த் அவள் பின்னாடி சந்தோஷமாக சென்றான். தோட்டத்தில் ஹரிணி சித்தார்த் முன்பு கைகளை பிசைந்தவாறு எச்சிலை விழுங்கியபடி எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல் குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தாள்.

''சொல்லு ஹரிணி. என்னிடம் ஏதோ சொல்ல தயங்குவது போல தெரியும். எதற்கு தயக்கம்? தைரியமாகச் சொல்லு!''

''நீங்க நாளைக்கு ஊருக்கு கிளம்பப் போறீங்கன்னு தெரியும். நீங்க கிளம்பறதுக்குள்ளே நான் உங்களிடம் 'அதை'ப் பற்றிச் சொல்லிடணும்.''

ஹரிணி இப்படி ஆரம்பித்ததும் அவனுக்குள் ஆயிரத்து ஐநூறு வால்ட் மின்சாரம் பாயத் தொடங்கியது.



''நீயே உன் வாயால் சொல்லணும் என்றுதான் நானும் இத்தனை நாள் காத்துக்கிட்டிருந்தேன்!''

''எங்க வீட்டுக்கு வந்ததிலிருந்து நீங்க என்னோட பழகும் விதத்திலிருந்து நீங்க என்னைத் தீவிரமாய் காதலிக்கிறீங்கன்னு நினைக்கிறேன்.''

''ஷ்யூர்! அதில் என்ன சந்தேகம்? நீயும் என்னைக் காதலிக்கிறேதானே?''

ஹரிணி தலையைக் குனிந்து கொண்டாள்.

''சித்தார்த் நான் உங்களைக் காதலிக்க..'' அவள் முழுவதும் முடிப்பதற்குள்..

''ஐய்யோ, என்னங்க.. என்னாச்சு உங்களுக்கு?'' தனபாக்கியத்தின் கதறல் உள்ளிருந்து ஒலித்தது. ஹரிணியும் சித்தார்த்தும் விரைந்து ஓடிப் போய் பார்த்தார்கள்.

கதிரேசனை நான்கைந்து பேர் கைத்தாங்கலாக சோபாவில் படுக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். கதிரேசன் ரத்தக் களரியில் மயக்கமாய் கிடந்தார். தலையில் பலமாக அடிபட்டு ரத்தம் விடாமல் வழிந்துக் கொண்டிருந்தது.

''அ.. அப்பா..''

ஹரிணி வீறிட்டு அலறினாள்.

''அப்பாவுக்கு என்னாச்சு?''

''பெரியவர் ஓரமாகத்தான் போய்க் கொண்டிருந்தார். படுபாவி அந்த லாரிக்காரன் தான் மேலே இடிச்சி தள்ளிட்டுப் போயிட்டான்மா..''

ஹரிணிக்கு இதயம் அடைத்தது. கண்கள் இருட்டியது. சித்தார்த்தன் அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

''கவலைப்படாதே ஹரிணி.. நான் பார்த்துக்கிறேன்... மாமாவைச் சீக்கிரம் ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போகணும்.. நிலைமை ரொம்ப விபரீதமாக இருக்கு. எல்லோரும் ஹாஸ்பிட்டலுக்குக் கிளம்புங்க!''

சித்தார்த் அனைவரையும் அவசரமாக கிளம்பச் சொன்னான். தனபாக்கியம் ஹரிணியிடம் விம்மியபடியே சொன்னாள்.

''ஹரிணி பீரோவை திறந்து நகைகளை எல்லாம் எடுத்துக்கிட்டு வா.''

''அய்யோ அத்தை நகையெல்லாம் இப்போ எதுக்கு? நிலைமைப் புரியாம என்னென்னவோ பேசிக்கிட்டிருக்கீங்க?''

''இவர் இருக்கிற நிலையைப் பார்த்தால் மருத்துவ செலவுக்கு எங்களிடம் சல்லிக் காசு கிடையாது. இப்போதைக்கு ஹரிணியின் நகை மட்டும்தான் இருக்கு. அதை வித்தால்தான் செலவு செய்ய முடியும்!''

''அண்ணி என்ன பேசறீங்க? நாங்கெல்லாம் இருக்கும் போது நீங்க ஏன் பணத்தைப் பத்திக் கவலைப்படறீங்க? அண்ணனைக் காப்பாத்த வேண்டியது எங்க கடமை.



அவருக்கு எவ்வளவு செலவு ஆனாலும் அதை நாங்க ஏத்துக்கிறோம். நான் உங்களுக்கு உத்தரவாதம் தருகிறேன்!''

கற்பகம் சொன்ன பிறகு தான் தனபாக்கியத்திற்கு தைரியம் வந்தது.

## 5

பிரைவேட் ஹாஸ்பிட்டலின் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டின் முன்பு ஹரிணி, தனபாக்கியம், சித்தார்த், கற்பகம், வேலாயுதம் அனைவரும் கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். இரண்டு தங்கைகளையும் பயந்து விடுவார்கள் என்று வீட்டிலேயே விட்டு வந்திருந்தார்கள். தனபாக்கியம் கீழே அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து விசும்பிக் கொண்டிருந்தாள்.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்டின் கதவு திறக்கப்படவே இல்லை.

''என் புருஷனைப் பார்க்கணும். மொதல்ல என்னை மட்டுமாச்சும் உள்ளே விடுங்க!''

அந்த பக்கமாக வந்த நர்ஸம்மாவிடம் கையெடுத்துக் கும்பிட்டாள். நர்ஸ் சட்டை செய்யாமல் விறுவிறுப்பாக நடந்து போக இன்டென்ஸிவ் கேர் யூனிட்டின் கதவு திறக்கப்பட்டது. டாக்டர் வெளிப்பட்டார். அனைவரும் டாக்டரை சூழ்ந்து கொண்டனர்.

''நடந்திருப்பது மேஜர் ஆபரேஷன். நல்லபடியா முடிஞ்சாச்சு. இனிமே எந்தப் பயமும் இல்லை. பேஷண்டுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. திரும்பினதும் எல்லோரும் போய்ப் பார்க்கலாம்!''

''ரொம்ப நன்றி டாக்டர். என் கணவர் பிழைச்சிட்டார். கற்பகம் உன்னாலதான் என் கணவர் பிழைத்தார். உன் அண்ணனை நீ காப்பாத்திட்டே. உனக்கு நான்தான் நன்றி சொல்லணும்!'' கற்பகத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு தனபாக்கியம் குரல் தழுதழுக்க.

''எனக்கு போய் எதுக்கு அண்ணி நன்றி எல்லாம்?''

''நீ தானே மூன்று லட்சம் செலவு பண்ணி உன் அண்ணனை காப்பாத்தி இருக்கே. இந்நேரம் நீ இல்லேன்னா எங்க நிலைமையை யோசிச்சிப் பாரு.''

''எல்லாம் அந்தக் கடவுளின் செயல் அண்ணி!''

சித்தார்த் ஹரிணியிடம் வந்தான். ''ஹரிணி உனக்கு இப்போ சந்தோஷம்தானே? உன் அப்பா பிழைத்துக் கொண்டார்!''

''ரொம்ப தாங்க்ஸ் சித்தார்த். உங்க குடும்பம் பண்ணின உதவிக்கு நாங்க என்ன கைம்மாறு பண்ணப் போறோம்னு தெரியலை?''

''நாங்க எதையும் எதிர்பார்த்து இந்த உதவியை செய்யலை ஹரிணி!''

இந்த ஒரு வார்த்தையால் ஹரிணிக்கு சித்தார்த்தின் மீதான மரியாதை பல மடங்கு உயர்ந்தது. கதிரேசன்



நினைவு திரும்பி மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தார். மங்கலான உருவத்தில் முதலில் ஹரிணியின் புன்முறுவலான முகம் தெரிந்தது. பின் தனபாக்கியம், கற்பகம், வேலாயுதம், சித்தார்த் அனைவரையும் கண்டுக் கொண்டார்.

''என்னங்க நீங்க பிழைச்சுக்கிட்டீங்க. நான் கும்பிட்ட தெய்வம் என்னை கைவிடலை!''

''அழாதே தனபாக்கியம். அதான் நான் பிழைச்சுக்கிட்டேன்ல. என்ன கற்பகம் நான் எல்லோரையும் ரொம்பப் படுத்திட்டேனா?''

''இல்லைண்ணா அண்ணியும் ஹரிணியும் தான் ரொம்ப துடிச்சுப் போயிட்டாங்க!''

''பேஷண்ட்டிடம் ரொம்ப நேரம் பேசக் கூடாது. யாராவது ஒருவர் மட்டும் இருங்க. மத்தவங்கள் எல்லோரும் கிளம்புங்க!''

நர்ஸ் கட்டளை போட்டபடி வர தனபாக்கியம் மட்டும் அங்கே இருந்துக் கொண்டாள். மற்ற அனைவரும் வெளியேறினர்.

## 6

கதிரேசன் இப்போ நன்றாகவே குணமாயிருந்தார். முகம் தெளிவுடன் காணப்பட்டது.

''நான் மறுபடியும் பிழைத்து கொள்வேனு கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை தனம்!''

''உங்க தங்கச்சியால் தான் நீங்க உயிர் பிழைச்சிருக் கீங்க.''

''என்ன சொல்றே?''

''உங்க ஆபரேஷனுக்காக கற்பகம் மூணு லட்சம் செலவு பண்ணியிருக்கான்னா பார்த்துக்கோங்க. அவங்க மட்டும் இல்லேயின்னா நாம அவ்வளவு பணத்துக்கு எங்கே போயிருப்போம். அதுமட்டுமில்லேங்க உங்களுக்கு விபத்து நடந்த பிறகு நிறைய ரத்தம் சேதமாயிடுச்சு. சித்தார்த் தம்பிதான் உங்களுக்கு தேவையான ரத்தத்தை கொடுத்து தக்க சமயத்தில் உதவினான். இப்போ நீங்க குணமானதுக்கு முக்கிய காரணம் உங்க தங்கச்சி குடும்பம்தான்!''

''தனம் கற்பகத்தையும் வேலாயுதத்தையும் கூப்பிடு!''

தனம் போய் அழைத்து வந்தாள். அவர்களை தொடர்ந்து ஹரிணியும் சித்தார்த்தும் வந்தார்கள்.

''க.. கற்பகம் நான் இப்போ குணமானதுக்கு முக்கிய காரணம் நீதான். நீயும் உன் குடும்பத்தாரும் எங்களுக்கு பண்ணின உதவிக்கு கைமாறாக நான் உங்களுக்கு என்ன பண்ணப் போறேனு தெரியலை. இந்த கடனை எப்படி அடைக்கப் போறேனு தெரியலை தங்கச்சி!'' கதிரேசன் கண் கலங்கினார்.

கற்பகம் வெகு இயல்பாக சொன்னாள்.

''அண்ணா நீங்க எனக்கு கைமாறு செய்யணும்னுதானே நினைக்கிறீங்க. வெண்ணெயை கையில் வெச்சுக்கிட்டு பாலுக்காக அலைவானேன்?''



''என்னம்மா சொல்றே?''

''மகாலட்சுமியாட்டம் பொண்ணை வெச்சிருக்கி யேண்ணே... என் பையன் சித்தார்த்துக்கு உன் பொண்ணு ஹரிணியை கட்டிக் கொடு அது போதும்!''

''பலே.. பலே..'' கதிரேசன் பலமாக சிரித்தார். எனக்கு இந்த யோசனை தோணாமப் போச்சே.''

என்றவாறு சித்தார்த்தையும் ஹரிணியையும் மாறி மாறி பார்த்தார்.

''ஜோடி பொருத்தம் கூட பேஷாதானிருக்கு. ஒரு நல்ல நாளை குறிச்சு கல்யாணத்தை முடிச்சிட வேண்டியதுதான்!''

ஹரிணிக்கு குப்பென்று வியர்த்தது. உடலெங்கும் அதிர்வலைகள். வேகமாக தன் அறைக்கு சென்று தாளிட்டுக் கொண்டாள். தாளிட்ட சில நொடிகளிலேயே இரண்டாவது தங்கை கதவைத் தட்டினாள்.

''அக்கா கதவைத் திற!''

''எதுக்குடி?'' எரிச்சலுடன் கேட்டாள்.

''உனக்கு போன்க்கா!''

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். ஹாலின் டீபாயின் மீது மல்லார்ந்த நிலையிலிருந்த ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

''ஹலோ.''

''ஹாய் ஹரிணி நான் ஆதித்யா பேசறேன். எப்படி இருக்கே?''

ஹரிணி உடனே குரலை தழைத்துக் கொண்டாள்.

''நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?''

''பைன் ஹரிணி. நம்ம விஷயத்தை உன் வீட்டில் சொல்லிட்டியா?''

''இன்னும் இல்லை ஆதித்யா?''

''இன்னுமா சொல்லலை. இன்னும் எத்தனை நாட்களுக்கு தள்ளிப்போட போறே? என்னிக்கிருந்தாலும் ஒரு நாள் எல்லோருக்கும் தெரியப் போகுது. அது இன்னிக்கே தெரிஞ்சால் என்ன?''

''சரி ஆதித்யா இன்னிக்கு நான் எப்படியாவது என் அப்பா அம்மாகிட்டே விஷயத்தைச் சொல்லிடறேன். பை!''

## 7

ஹரிணி ரிஸீவரை சாத்திவிட்டு திரும்பினாள். கற்பகம் நின்றுக் கொண்டிருந்தாள்.

''யாரும்மா போன்ல?''

''என்னோட ப்ரெண்டு அத்தை!''

''முகத்தைக் கழுவிட்டு வாம்மா!''

''எதுக்கு அத்தை?''

''என்னோட வருங்கால மருமகள் உன்னை தலைவாரி பூச்சூட்டி அழகு பார்க்க வேண்டாமா?''

''அ.. அத்தை!''



''மசமசனு நின்னுகிட்டு இல்லாம போய் முகத்தை கழுவிட்டு சீக்கிரம் வா!''

ஹரிணி செய்வதறியாமல் கற்பகத்தின் பேச்சுக்குக் கட்டுப்பட்டாள். கற்பகம் அவளை உட்கார வைத்து படிய தலைவாரி குஞ்சலத்தை வைத்துவிட்டாள். மல்லி சரத்தை அடுக்கடுக்காக வைத்து நேர்த்தியாக தொங்க விட்டாள். நெற்றிசுட்டி வைத்து கண்களுக்கு மை தீட்டி விட்டாள். ஹரிணி அழகு தேவதையாய் காட்சி அளித்தாள்.

''என் ராசாத்தி என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு!''

''அம்மா இந்த நெக்லஸை ஹரிணிக்கு போட்டு விடுங்கம்மா!'' என்று சிவப்புகலர் சதுர நகைப் பெட்டியை நீட்டினான் சித்தார்த்.

''அடப்பாவி! நெக்லஸை எப்படா வாங்கிட்டு வந்தே?''

''மாமா சம்பந்தம் பேசி முடிச்சவுடனேயே வாங்கிட்டு வந்துட்டேம்மா!''

கற்பகம் நகை பெட்டியைத் திறந்து நெக்லஸை ஹரிணிக்கு அணிவிக்கப் போனாள்.

''அய்யோ, எனக்கு இதெல்லாம் வேண்டாம்!''

ஹரிணியிடமிருந்து சிடுசிடுவென்று பதில் வந்தது. கற்பகத்திற்கும் சித்தார்த்துக்கும் முகம் வாடிப் போனது.

''ஹரிணி மாப்பிள்ளை ஆசையாய் வாங்கிட்டு வந்திருக்காரு. இப்படி மூஞ்சியில் அடித்த மாதிரி பேசக் கூடாது. நெக்லஸைப் போட்டுக்கோ!'' தனம் அதட்ட,

ஹரிணி வேறு வழியின்றி கழுத்தை நீட்டினாள். வெள்ளை கற்கள் பதித்த நெக்லஸ் ஹரிணியின் கழுத்தில் ஜம்மென்று உட்கார்ந்துக் கொண்டது. ஹரிணி விருட்டென்று எழுந்தாள். அம்மாவின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு அறைக்குள் போனாள்.

''என்னம்மா இதெல்லாம்? என்னை சுற்றி என்ன நடக்குது? யாரைக் கேட்டு சித்தார்த்திற்கு என்னை நிச்சயம் பண்ணீங்க?''

''மெதுவாக பேசுடி. அவங்க காதில் விழப் போகுது. யாரை கேட்கணும்?''

''என்னை ஒரு வார்த்தை கூடக் கேட்காம அப்பா பாட்டுக்கு என்னென்னமோ பேசிட்டார். நான் காலேஜில் படிக்கும் போதே ஆதி...''

''முதலில் நான் சொல்வதைக் கேளு. பிறகு நீ பேசலாம்'' என்றாள் தனம் அழுத்தமாக.

''இதோ பாரு ஹரிணி உன் அத்தை குடும்பத்துக்கு நாம ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம். உன் அப்பா உயிருக்குப் போராடிக்கிட்டிருந்தப்போ அவங்க எந்த அளவுக்கு உதவினாங்கன்னு நீயே உன் கண் முன்னாடி பார்த்திருப்பே. அவங்க மூணு லட்சம் கொடுத்து உதவலைன்னா உன் அப்பாவை இந்நேரம் நீ பார்த்திருக்க முடியாது. மூணு பொம்பளை பசங்களை வெச்சுக்கிட்டு நான் எப்படியெல்லாம் தவிச்சிருப்போனோ? நினைச்சுப் பார்க்கும் போதே மனசு பதறுது. கற்பகம் ஆசையாய் உன்னை அவ பையனுக்கு கேட்டிருக்கா. அவங்க பண்ணின உதவிக்கு



நன்றி கடனாய் இதை நாம ஏன் செய்யக் கூடாது? சித்தார்த்துக்கு என்ன குறைச்சல்.. நல்லா இருக்கான். கை நிறைய சம்பாதிக்கிறான். உன் மேல் கொள்ளை பிரியமாய் இருக்கிறான். நீ அவங்க வீட்டிற்கு மருமகளாப் போனா உன்னை எல்லோரும் நல்லா வெச்சுப்பாங்க.. இது மாதிரி நல்ல வாழ்க்கை யாருக்கு அமையும் சொல்லு!''

''அ... அம்மா..''

''நல்ல சம்பந்தம் கூடி வர்ற நேரத்தில் 'வேண்டாம்ன்னு' சொல்லி உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக்காதே!''

ஹரிணி இரண்டு மனதாக குழம்பித்தான் போனாள். அம்மா கூறியதிலும் அர்த்தம் இருப்பதாக தோன்றியது. இவர்கள் இந்நேரம் இல்லையென்றால் என் அப்பா பிழைத்திருக்க மாட்டார். அம்மா தனி ஆளாய் மூன்று பொண்ணுகளையும் எப்படி கரை சேர்த்திருப்பார். இதுவரை எனக்கு மட்டும் தான் கொஞ்சம் நகை சேர்த்து வைச்சிருக்காங்க. இரண்டு தங்கைகளுக்கு இன்னும் ஒரு பொட்டு தங்கம் கூட சேர்க்கவில்லை.

நான் சித்தார்த்தை கல்யாணம் பண்ணிக் கொண்டால் ஆதித்யாவின் நிலை? நான் அவனுக்கு செய்யும் துரோகம் இல்லையா...?

''ஹரிணி!''

குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். கற்பகம் சூட்கேஸுடன் நின்று கொண்டிருந்தாள்.

''நாங்க ஊருக்குக் கிளம்பறோம். கல்யாணப் பொண்ணு இப்படி உம்மென்று இருக்கக் கூடாது. சிரிச்ச முகமாக இருக்கணும்'' என்று சொல்லிவிட்டு அவள் கழுத்திலிருந்த டாலர் சங்கிலியை கழற்றி அவளுக்கு அணிவித்தாள்.

''அ.. அத்தை..!''

''போட்டுக்கோம்மா என் நகைகளை உனக்கு கொடுக்காம வேற யாருக்குக் கொடுக்கப் போறேன்?''

''கற்பகம் ஹரிணியை இப்பவே தலையில் தூக்கி வெச்சுப்பே சமையலில் அவளுக்கு இன்னும் ஏபிசிடி கூட தெரியாது. அப்போ அவளை இடிப்பே!''

''அண்ணி மகளுக்கு சமைக்க தெரியலைன்னா எந்த அம்மாவாவது இடிப்பாளா? ஹரிணி என் மருமகள் இல்லை. என் மகள். அவ எப்படி நடந்துக்கிட்டாலும் நான் அவளை இடிக்க மாட்டேன். பாசமாகத்தான் இருப்போம்!''

''எனக்கு மகள் இல்லாத குறையை உங்க பொண்ணு தான் தீர்த்து வைக்கப் போறா. ஹரிணி எங்க வீட்டுக்கு வரப் போகிற நாளை ஆவலுடன் எண்ணிக்கிட்டிருக்கோம்'' என்றார் வேலாயுதம். சித்தார்த் அவளைப் பார்த்து கண் சிமிட்டினான். ஹரிணி நெகிழ்ந்தே போய்விட்டாள்.

''அண்ணா உடம்பை பார்த்துக்கோங்க. நாங்க கிளம்பறோம்!''

''சரிம்மா!''

அவர்கள் எல்லோரும் சென்ற பிறகு வீடே வெறிச்சோடி போய் கிடந்தது. அவர்கள் காட்டிய தூய்மையான அன்பில்



சித்தார்த்தையே கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானித்திருந்தாள் ஹரிணி.

## 8

ஹரிணி தொலைபேசியில் விசாலியிடம் நடந்ததைக் கூறினாள்.

''நான் எடுத்த முடிவு தப்பா விசாலி?''

''உன் அப்பாவைக் காப்பாற்றிய காரணத்துக்காக உன்னை சித்தார்த்துக்கு அர்ப்பணித்து இருக்கிறார்கள். உனக்குப் பதில் உன் முதல் தங்கையை கொடுத்திருக்கலாமே?''

''சித்தார்த் என்னைத்தானே காதலித்தார்?''

''ஆனா நீ ஆதித்யாவைக் காதலிப்பதை எப்படி மறந்தே?''

''என்னை என்னடி பண்ணச் சொல்றே. இக்கட்டான நிலை. நான் என் காதலை வீட்டில் சொல்வதற்கு முன்னாலேயே சித்தார்த் வந்து எல்லோர் மனசுலேயும் இடம் பிடிச்சுட்டார். இதுல அப்பா வேற சீரியஸாய் ஹாஸ்பிட்டலில் எல்லாமே நிமிஷ நேரத்தில் முடிஞ்சிடுச்சு. எங்க அத்தை எங்கள் மேல் காண்பிக்கிற அக்கறையிலும், பரிசுத்தமான அன்பிலும் நாங்கள் அனைவரும் கட்டுப்பட்டுட்டோம்.''

''சரி ஹரிணி நடந்தது நடந்து போச்சு. ஆதித்யாவிற்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிடவா?''

''பைத்தியம் மாதிரி உளறாதே. உனக்கு இப்போ கலியாணம் நிச்சயம் ஆயிருக்கு. இது மாதிரி நேரத்தில் வேற ஆண்களோடு பேசுவது நல்லதில்லை. ஆதித்யாவை மறந்திடு. எந்தவித தொடர்பும் வேண்டாம். அவன் போட்ட கடிதங்களை எல்லாம் அடையாளம் தெரியாதவாறு கொளுத்திடு. ஆதித்யாவை நான் நேரில் சந்தித்து விஷயத்தை சொல்லிக்கிறேன். நீ நிம்மதியாய் இரு!''

''சரி விசாலி. நீ சொன்னபடி அவனுடைய கடிதங்களை எல்லாம் கொளுத்திடறேன்!''

போனை வைத்த பிறகு ஹரிணிக்கு கை, கால் எல்லாம் சில்லென்றானது. மனசு வேறு படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. அன்று இரவு எல்லோரும் தூங்கி விட்டார்களா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு தனது டேபிள் டிராவை திறந்து கத்தை கத்தையாக ஆதித்யா அவளுக்கு அனுப்பிய காதல்கடிதங்களை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குள் வந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் இல்லை. கடிதங்கள் மீது சிறிது மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குச்சியை கொளுத்தி அதன் மேல் போட்டாள். காதல் கடிதங்கள் குப்பென்று பற்றிக் கொண்டு கொழுந்து விட்டு எரிய தொடங்கின. குச்சியால் கிளறி கிளறி அனைத்து கடிதங்களையும் எரித்து முடித்தாள். எரித்தது அவளது காதலை மட்டுமா? அவளது வாழ்க்கையையும்தான். தன் தலையில் தானே நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொண்டோம் என்பது அப்போது அவளுக்கு தெரிந்திருக்கவில்லை.



## 9

ஒரு வழியாக ஹரிணி சித்தார்த்தின் கல்யாணம் ஜாம் ஜாமென்று நடந்து முடிந்தது. சித்தார்த் கட்டிய புது தாலி ஹரிணியின் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்தது. ஹரிணி தாலியை அடிக்கடி பூரிப்புடன் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். உடலாலும் மனதாலும் சித்தார்த்திடம் அடைக்கலம் ஆகிவிட்டாள். புதுமண வாழ்க்கை புது முகப் பொழிவை கொடுத்திருந்தது.

அன்று காலை சித்தார்த்துக்கு டிபன் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். மிளகு பொங்கலும், கேசரியும் கமகமத்தது.

''டிபன் சூப்பர் ஹரிணி'' என்றான் சித்தார்த். கொஞ்சம் பொங்கலை எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான். ஹரிணி அவன் ஊட்டி விட்டதால் ஆசையாய் சுவைத்தாள். அடுத்த கணம் முகம் சுளித்தாள்.

''என்னங்க பொங்கல்ல உப்பே போட மறந்துட்டேன். நான் ஒருத்தி வர வர ஞாபக மறதி ஜாஸ்தியாயிடுச்சு'' என்றவாறு அவனைப் பார்த்தாள். அவன் பாட்டுக்கு லபக் லபக்கென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''என்னங்க உப்பில்லாத பொங்கலை எப்படி சாப்பிடறீங்க. இருங்க 'சால்ட்' எடுத்துட்டு வர்றேன்!''

''நே, நோ உப்பில்லாமலே ரொம்ப டேஸ்டா இருக்கு!''

ஹரிணி அவனையே இமைக்காமல் பார்த்தாள்.

''என்ன அப்படி பார்க்கிறே. நீ எப்படி நடந்துக்கிட்டாலும் உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். என்னை பளார் பளார் என்று அறைந்தால் கூட நான் உன் மேல் கோவிச்சுக்க மாட்டேன்!''

ஹரிணியின் கண்கள் சட்டென பனித்தன.

''உங்களை மாதிரி கணவர் கிடைப்பதற்கு நான் புண்ணியம் செஞ்சிருக்கணும்!''

''நமக்கு இப்பதான் கல்யாணம் ஆகியிருக்கு. ஸோ நோ இமோஷன்ஸ்'' என்றவாறு அவளது கண்களை துடைத்து விட்டான்.

''எதை வைச்சு என் மேலே பிரியப்பட்டீங்க?''

உடனே அவன் முகத்தில் ஒரு மந்தகாச சிரிப்பு.

''ஒன்றா.. இரண்டா.. எடுத்துச் சொல்ல என்று பாடத்தான் தோன்றுகிறது'' என்று பாடிக் காட்டிவிட்டு மறுபடியும் சிரித்தான்.

''கிண்டலா நான் எவ்வளவு ஆர்வமா கேட்கிறேன். பதில் சொல்றதை விட்டுட்டு'' என்று சிணுங்கினாள்.

''அடடே இந்த சிணுங்கல் கூட இதுவரை நான் கேட்காத சங்கீதமா இருக்கே. ஹரிணிம்மா நான் உன்னை முதன் முதலில் நேரில் பார்த்தது மைசூர் பேலஸில் வெச்சுதான். உன்னை பார்த்ததுமே என் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று விட்டது. மைசூர் அரண்மனைக்கே மகாராணி நீ தானோனு ஒரு சந்தேகம் வந்தது. அவ்வளவு ஒரு அழகு தேவதை மாதிரி.. அவ்வளவு கூட்டத்திலும் நீ தனியா தெரிஞ்சே.



என் மனசை அவ பின்னாடியே அலையாதேன்னு இழுத்து இழுத்துப் பிடிக்கிறேன். அதுவோ என் பிடியை உதறிக்கிட்டு, உன் பின்னாலேயே இன்னமும் சுத்திக்கிட்டு திரியுது என்ன செய்யச் சொல்லு!''

ஹரிணிக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் முட்டி மோதிக் கொண்டன.

''நிஜமாகவா சித்தார்த்?''

''அடிப்பாவி இன்னுமா சந்தேகம்?''

''உன்னை பார்த்ததிலேருந்து உன்னைத் தவிர எனக்கு வேறெந்த நினைப்புமே இல்லே. ஒருநாள் ராத்திரி படுக்கையில் சாய்ஞ்சு கண் மூடினேன். மூடிய கண்களுக்கு ஒருத்தர் எதுக்க வந்து நின்று 'நான் தான் கடவுள்.. உனக்கு என்ன வேணும்? கேள்'ன்னார். எனக்கோ குப்புன்னு கோபம் வந்துட்டுது. நீ யாராயிருந்தாலும், எனக்கு கவலையில் லையே.. முதல்ல என் மனசை விட்டு வெளியே போ! என் ஹரிணி என் மனசுக்குள் நுழையற நேரம் இது. எனக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் அவ கொடுப்பா! நீ உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போய்கிட்டே இருன்னு கத்தினேன்.''

''ஐயய்யோ..''

''ஆனா அவரு ஐயையோன்னு சொல்லலை. இந்த மாதிரி ஒரு அனுபவம் அவருக்கு இதுவரைக்கும் ஏற்பட்டதில்லை போலிருக்கு. தலையைத் தொங்க போட்டுக்கிட்டு சத்தம் காட்டாம போயிட்டாரு. நீ உள்ளே நுழைஞ்சிட்டே!''

''பரவாயில்லையே... ரொம்ப கவித்துவமா பேசறீங்களே... அப்புறம்?''

''இன்னும் எவ்வளவு இருக்கு ஒரே நாள்லே சொல்லிட்டா எப்படி? நேரம் பாத்து ஒவ்வொண்ணா எடுத்து விட்டுக் கிட்டேயிருப்பேன்.''

''அப்படியா?''

''அப்படித்தான்.''

என்று ஹரிணியின் கன்னத்தை செல்லமாகக் கிள்ளினான்.

## 10

இப்படி ஒவ்வொரு நாளும் ஹரிணியின் மனசுக்குள்ளே சித்தார்த் புதுப்புது பூந்தோட்டம் போட்டுக் கொண்டே இருந்தான். காற்று ஒருநாள் கூட ஹரிணி மீது சூடாக வீசியதில்லை. பனி கூட கொஞ்சம் வெதுவெதுப்பாகவே இருந்தது. இந்த வாழ்க்கைதான் எவ்வளவு சந்தோஷமாகப் போகுது. சித்தார்த்தின் காதலால் ஆதித்யாவோட நினைவுகளே அலை வந்து அழித்துப் போன பாதச்சுவடா இருந்த இடம் தெரியாம மறந்துபோனது. அவளைச் சுற்றி எப்பொழுதும் ஒருவித சாந்தம் பரவிக் கிடந்தது. செவிகளில் விழுந்த ஒவ்வொரு வார்த்தையும் தேனில் நனைந்து வந்தது போல் தித்திப்பாகவே இருந்தது.

எல்லாவற்றுக்கும் என் சித்தார்த் தான் காரணம். ஏதோ காணக் கிடைக்காத தேவதையைக் கண்டுவிட்டது போல்



உலகிலேயே ஹரிணியை மிஞ்சிய பெண் எவளும் இல்லை என்பதுபோல் அவளை தலையில் தூக்கி வைத்து கூத்தாடினான். மார்பை ஊஞ்சலாக்கி அதில் அவளை கிடத்தி தாலாட்டினான். மனசை சிம்மாசனமாக்கி அதில் ஒரு தேவதையைப் போல் ஹரிணியை கொலு வைத்திருந்தான். பொறுக்க முடியாத ஹரிணி ஒரு நாள் அவள் முகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் புன் சிரிப்பை ஒளித்து வைத்துவிட்டு பொய்க் கோபத்தோடு கேட்டாள்.

''அப்படி என்னதான் நான் அபூர்வமானவள். எதற்காக இப்படி என்னைக் கொண்டாடுகிறீர்கள். இதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நான் தவிக்கிறேன். இதெல்லாம் ஏன்னு சொல்ல மாட்டீங்களா?''

சித்தார்த் தனது வழக்கமான வசீகரப் புன்னகை மாறாமல் அவளை வளைத்து விடுவதைப் போல் பார்த்தான்.

பிறகு தலையை தாழ்த்திக் கொண்டு கரகரப்பாய் சொன்னான்.

''ஏன்னு கரெக்ட்டா சொல்லத் தெரியலே. ஆனா உன்னை முதன் முதலா பார்த்த அந்த வினாடியிலிருந்து 'இவ நமக்கே நமக்கானவள்'ங்கிற எண்ணம் வந்துடுச்சி. மனசு முழுக்க மார்கழி மாத மரமல்லி மரம் மாதிரி பூத்துக் குலுங்க ஆரம்பிச்சுடுச்சு... எவ்வளவு டென்ஷன்ல இருந்தாலும் உன் ஞாபகம் வந்ததும், மனசு பஞ்சு போல லேசாச்சு... எத்தனை பெரிய சிக்கலான காரியமா இருந்தாலும் ப்பூ.. இதுதானேன்னு ஊதித் தள்ளுற துணிச்சல் வந்துச்சு. இதெல்லாம் எப்படினு கேட்டா

காரணம் சொல்லத் தெரியாது. ஆனா.. நான் சொன்ன தெல்லாம் நிஜம்!''

அவன் சொன்னது அத்தனையும் நிஜம்தான். காண்பதற்கு அவனது கண்கள் சாட்சி அளித்தன. சித்தார்த் ஹரிணியின் முகத்தைக் கைகளில் ஏந்தியபடி ஒருநாள் கேட்டான்.

''ஏன் ஹரிணி உன்னை எப்படியெல்லாம் விரும்பு றேன்னு வித விதமா சொல்லி இருக்கேன். ஆனால் ஒருநாள் கூட என்னைப் பத்தி நீ என்ன நினைக்கிறேன்னு சொல்லவே இல்லையே. ஒரு வேளை போயிட்டு போறான்னு சம்மதிச்சியா?''

ஹரிணியோ அதிர்ந்து போனாள். ஒரு வினாடி பேச்சு கூட மறந்து போனது.

''அப்படின்னா கடமைக்காகத்தான் உங்க மேலே பிரியம் காட்றேன்னு நினைக்கிறீங்களா? என் மனசு உங்களுக்கு புரியலையா?''

இப்படி ஹரிணி கேட்டதும் சித்தார்த் துடித்துப் போனான்.

''ஐயையோ... தான் சொன்னதை சரியா புரிஞ்சுக்கலை நீ..''

''புரிஞ்சிக்கிட்டுத்தான் சொல்றேன். என் குடும்பத்தின் மேல் நீங்க காட்டின அன்பும் அக்கறையும் உங்க மீது பல மடங்கு மரியாதையை கூட்டிடுச்சு. அப்பவே இறுக்கமா பூட்டிக் கிடந்த என் மனசு படாருன்னு திறந்துகிடிச்சு. என்னையும் மீறி நீங்க எனக்குள்ளே பூந்துகிட்டு இந்த



நிமிஷம் வரைக்கும் என்னைப் படாதபாடு படுத்திக்கிட்டு இருக்கீங்க. ஒரே வரியிலே சொல்லப் போனா நான் இப்போ உங்க காதலியா மட்டும்தான் இருக்கேன். மனைவியா மாற ரொம்ப நாளாகும் போலிருக்கு!''

''உனக்கொரு உண்மை தெரியுமா ஹரிணி?''

''எந்த உண்மை?''

''மனைவி காதலியா இருக்கிற சந்தோஷம் மாதிரி உலகத்திலே வேற சந்தோஷமே கிடையாது.. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ். எனக்கு சரியான வயதில்தான் உன்மேல் காதல் வந்திருக்கிறது. கல்லூரியில் படிக்கிற காலத்தில இந்த காதல் கீதல்ங்கிறதெல்லாம் பெரிசா ஈடுபாடு வரலை. என் வயசு டீனேஜ் பசங்களெல்லாம் பைத்தியம் பிடித்து திரிஞ்சப்ப நான் ரொம்ப நிதானமா இருந்தேன். எந்தப் பெண் மீதும் அப்படி ஒரு ஈர்ப்பு ஏற்படலே. நீ ஹரிணி கல்லூரி நாட்களில் எனி லவ்ஸ்?''

சித்தார்த் இப்படிக் கேட்டவுடன் ஹரிணி ஒரு கணம் ஆடிப் போனாள்.

''சே, சே எனக்கும் எந்த ஆண் மீதும் ஈர்ப்பு ஏற்படலே.. உங்களைத் தவிர..''

''வெரிகுட்! நீ போய் யாரை லவ் பண்ணி இருக்கப் போறே. எல்லா பையன்களும் உன் அழகில் மயங்கி உன் பின்னாடி அலைஞ்சிருப்பானுங்க. இல்லையா?''

அவன் கண்களை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்துக் கொண்டாள்.

அந்த நேரத்தில் தொலைபேசி சிணுங்கியது. ஹரிணி தான் போய் எடுத்தாள். தொலைபேசியில் ஆதித்யாவின் குரலைக் கேட்டதும் ஹரிணிக்கு தூக்கி வாரிப் போட்டது.

## 11

''கன்கிராட்ஸ் ஹரிணி மேரீட் லைப் எப்படி போயிட்டு இருக்கு?''

ஆதித்யா போனில் இப்படி கேட்டவுடன் ஹரிணி அப்படியே திகைத்து நின்றாள்.

''என்ன பதிலைக் காணோம்? எப்படி இருக்கே ஹரிணி?''

''நா.. நல்லாயிருக்கேன்!''

''என்னை பற்றி அவரிடம் சொன்னியா?''

ஹரிணிக்கு ஒரு நொடி பூமி காலை விட்டு நழுவுவது போல இருந்தது. பயத்தில் டொக்கென ரிஸீவரை வைத்து விட்டு அப்படியே தொப்பென சோபாவில் சாய்ந்தாள். சித்தார்த் வந்தான்.

''ஹரிணி போனில் யாரு? உனக்கு ஏன் இப்படி வியர்த்து ஊத்துது. உடம்புக்கு ஏதாவது... டாக்டரிடம் போலாமா?''

''வேண்டாங்க.. ஐயம் ஆல் ரைட்.. போனில் என் பிரெண்ட் விசாலிதான். கல்யாணத்துக்கு அவளால் வர முடியவில்லை. அதான் போனில் விசாரிக்கிறாள்.''

''சரிடா நான் ஆபீஸ் கிளம்பறேன். நீ படுத்து ரெஸ்ட் எடு!''



வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு வந்தாள். சித்தார்த் பைக்கை ஸ்டார்ட் செய்து கேட்டைத் திறந்துக் கொண்டு வெளியே வந்தபோது எதிரே வந்த தபால்காரன் கடிதத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு சென்றான். சித்தார்த் கடிதத்தைப் பார்த்தான். அவன் பெயருக்குதான் வந்திருந்தது. கையெழுத்து வேற புதியதாக இருந்தது. கடிதத்தை திருப்பி திருப்பிப் பார்த்தான். யாராக இருக்கும். யோசனையுடன் ஷர்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். உள்ளே ஹரிணிக்கு படபடப்பு அடங்கிய பாடில்லை. இந்த தொலைபேசி நம்பர் ஆதித்யாவுக்கு எப்படி தெரிந்தது. பழசை கிளறி ஏதாவது பிரச்சினையை பண்ணுவானா? மீண்டும் தொலைபேசி அலறியது. விரைந்து போய் எடுத்தாள்.

''ஹலோ..!''

''ஏன் ஹரிணி போனை பாதியிலேயே கட் பண்ணிட்டே?''

''ப்ளீஸ் ஆதித்யா இப்போ நான் இன்னொருத்தருடைய மனைவி. தயவு செய்து என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என்னை சித்தார்த்திற்கு கல்யாணம் பண்ணிக்கும்படியாயிடுச்சு!''

''குட் ஜோக் ஹரிணி. அவன் உன் அப்பாவின் உயிரைக் காப்பாற்றியதால் தானே அவனைக் கல்யாணம் பண்ணிக் கிட்டே. உன் அப்பாவுக்கு இப்படி ஆயிடுச்சேன்னு என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அவனை விட பல மடங்கு நான் உங்க குடும்பத்தாருக்கு உதவி

இருப்பேனே. துரோகம் பண்ணிட்டே ஹரிணி! பச்சை துரோகம்!''

''ப்ளீஸ் ஆதித்யா. என்னை நோகடிக்காதீங்க தயவு செய்து என் நிலமையை புரிஞ்சுக்கோங்க. என்னை மறந்துடுங்க. நீங்களும் வேற பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோங்க!''

''உன்னை மாதிரி சின்ன புத்தி எனக்குக் கிடையாது. உன்னை ஒரு நொடியில் மறந்துட்டு வேறொருத்தியை கல்யாணம் செஞ்சுக்க..''

ஆதித்யாவின் வார்த்தைகள் ஈட்டியாய் அவள் நெஞ்சைக் குத்திக் கிழித்தது. என்ன சொல்வதென்று தெரியாமல் ரிஸீவரை பிடித்தபடி ஜடமாய் நின்றுக் கொண்டிருந்தாள்.

''டோண்ட் வொர்ரி ஹரிணி என்னால உன் வாழ்க்கையில எந்தப் பிரச்சனையும் வராது. இனிமே உன் பக்கமே தலைகாட்ட மாட்டேன். நான் வேற ஊருக்குப் போகப் போறேன். எந்த ஊர் என்பது எனக்கே தெரியாது. ஆனா ஆயுசு முழுக்க உன் நினைவுகளோடு தான் வாழ்ந்துக் கொண்டிருப்பேன் குட்பை!''

அத்துடன் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஹரிணி ரிஸீவரை சாத்திவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

இனிமேல் ஆதித்யாவால் எனக்கு எந்த பிரச்சினையும் இருக்காது வாழ்க்கை ஸ்மூத்தாகப் போகும்.



## 12

சித்தார்த் இன்னும் கம்பெனியில் இருந்து திரும்பவில்லை. ஹரிணி படபடப்புடன் இப்படியும் அப்படியுமாக நடந்துக் கொண்டிருந்தாள்.

''எங்கே போனார் இவர்? கம்பெனியில் எப்பவோ கிளம்பியாச்சுன்னு சொன்னாங்களே? இவ்வளவு நேரமாகியும் இன்னும் வரவில்லையே?''

அத்தைக்குப் போன் செய்து துணைக்கு வந்து இருக்கச் சொல்லலாமா? ரிஸீவரை எடுத்து கற்பகத்திற்கு டயல் செய்யப் போனாள். அதற்குள் வெளியே பைக் வரும் சத்தம் கேட்டது. ரிஸீவரை சாத்திவிட்டு விரைந்து போய் கதவை ஆசையாகத் திறந்தவள் திடுக்கிட்டுப் போனாள். வாசற் கதவில் நின்று கொண்டிருந்த சித்தார்த்தின் மீதிருந்து குப்பென்று ஒருவிதமான குமட்டல் வாடை அடித்தது. முகத்தில் வியர்வை திட்டு திட்டாய் படிந்திருந்தது. கண்கள் இளந்தப் பழமாய் சிவந்து இருந்தன. தள்ளாடியபடியே உள்ளே வந்தான். ஹரிணிக்கு கோபம் வந்தது.

''நில்லுங்க. குடிச்சிட்டு வந்திருக்கீங்களா?''

அவன் பேசவில்லை.

''உங்களைத்தான் கேட்கிறேன். காதுல விழலை. எத்தனை நாளா இந்தக் குடிப் பழக்கம் இருக்குது. நல்லவன் மாதிரி நடிச்சு என்னை நம்ப வைச்சு ஏமாத்திட்டீங்க. போயும் போயும் ஒரு குடிகாரனையா கல்யாணம் பண்ணிக் கிட்டேன்?''

''சர்தான் நிறுத்துடி!''

அந்த வீடே அதிருகிற மாதிரி கத்தினான். ''நான் ஒருநாள் குடிச்சிட்டு வந்ததுக்கே இப்படி புலம்பறே. நீ கல்யாணத் துக்கு முன்னாடி ஒருத்தனை காதலிச்சிட்டு இப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒவ்வொரு நாளும் நல்லவள் மாதிரி நடிச்சுக்கிட்டு என்னை ஏமாத்திக்கிட்டி ருக்கியே என் மனசு என்ன பாடுபட்டிருக்கும்?''

ஹரிணி அதிர்ந்து போனாள்.

''சொல்லுடி ஆதித்யா யாரு அவனுக்கும் உனக்கும் எத்தனை நாளா பழக்கம்?''

''எ.. என்னங்க... ஆ.. ஆதித்யாவா அப்படி யாரையும் எனக்குத்தெரியா?''

''யூ... பொய் சொல்றே..''

பளாரென அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான். ஹரிணி துடிதுடித்துப் போனாள். சித்தார்த்தா இது? பாசமாய் என் பின்னாடியே வளைய வளைய வருபவன்.. மென்மையானவன். இவ்வளவு மிருகத்தனமாய் கூட நடந்துக் கொள்வானா?''

''உங்களுக்கு யாரோ பொய்யான தகவலைக் கொடுத் திருக்காங்க'' என்று திக்கினாள்!

''ஷட்டப்! இந்தக் கடிதத்துக்கு என்ன பதில் சொல்லப் போறே?''

காலையில் அவனுக்கு வந்த கடிதத்தை ஷர்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து அவளது முகத்தில் விட்டெறிந்



தான். அந்தக் கடிதத்தை வேகமாய்ப் பொறுக்கி எடுத்து படிக்கத் தொடங்கினாள்.

''மை டியர் ஆதித்யா உங்களை பிரிந்திருக்கிற ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகம் மாதிரி கழிகிறது. நாம கல்லூரியில் பழகின நாட்களின் நினைவுகளில் தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன். உங்களை கை பிடிக்கப் போகும் நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன். என்றும் உங்கள் நினைவாக ஹரிணி.''

ஆதித்யாவுக்கு நான் எழுதிய கடிதம் இவருக்கு எப்படிக் கிடைத்தது? ஹரிணியின் உடல் பீதியில் நடுங்கத் தொடங்கியது.

விஷயம் வெட்ட வெளிச்சமாகி விஸ்வரூபம் எடுத் தாச்சு. இனி எதையும் மறைச்சு பிரயோஜனமில்லை என்பதை உணர்ந்தாள். சடாரென சித்தார்த்தின் காலில் விழுந்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்க... தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க!''

சித்தார்த் அவளது கூந்தலை கொத்தாகப் பிடித்து தூக்கினான்.

''ஆதித்யாவை காதலிக்கிறேன்னு நான் உன்னைக் காதலிக்க ஆரம்பித்தபோதே என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நான் விலகிக் கொண்டிருப்பேனே ஏண்டி சொல்லலை?''

"எத்தனையோ தடவை சொல்ல வந்தேன். நீங்க என்னை பேசவிடலை. அதற்குள் ஆக்ஸிடென்டான என் அப்பாவின் உயிரை நீங்கதான் காப்பாத்தினீங்க. அதற்காக என் காதலை தியாகம் செய்து ஒட்டுமொத்த வாழ்க்கையையும் நன்றி கடனாக உங்களுக்கு அர்ப்பணித்து விட்டேன்.

"சர்தான் வாயை மூடுடி. பத்தினி மாதிரி டயலாக் விடறே. நமக்கு முன்னால் தன் மனைவிக்கு வேறொருவருடன் தொடர்பு இருந்திருக்கிறதுனு தெரிந்தால் எந்த கணவனும் அதைத் தாங்கிக்க மாட்டான். நானும் அதே மாதிரிதான். வீட்டைவிட்டு வெளியே போடி!"

"என்னங்க சொல்றீங்க. நான் வீட்டை விட்டு வெளியே போகவா? சாதாரண விஷயத்தை ஏன் பெரிசு படுத்தறீங்க?"

இதைக் கேட்டதும் சித்தார்த்தின் கோபம் கூட கொஞ்சம் ஏறியது. "எதுடி சாதாரண விஷயம். இளிச்சவாயன் எவனாவது கிடைப்பான். அவன் கிட்டே போய் சொல்லு. எனக்கு நீ பண்ணின துரோகம் இன்னும் என் நெஞ்சில் முள்ளா குத்திக்கிட்டு இருக்கு!"

ஆவேசத்துடன் ஹரிணியின் முதுகிலும் மார்பிலும் எட்டி உதைத்தான்.

கூந்தலை ஒரு கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு முகத்தில் ஓங்கி அறைந்தான். ஹரிணி மூர்ச்சையாகி அப்படியே கீழே சரிந்தாள். பின் சித்தார்த் வேகமாய் சொம்பில் தண்ணீர் கொண்டு அவளது முகத்தில் அடித்தான். அவள் மெல்ல மெல்ல மூர்ச்சை தெளிந்து



எழுந்து உட்கார்ந்தாள். மூக்கும் உதடுகளும் வீங்கியிருந்தன. சித்தார்த் ஹரிணியின் முடியை கொத்தாகப் பிடித்து மீண்டும் மார்பிலும் முகத்திலும் எட்டி உதைத்தான். விரைந்து சென்று அவளது துணிமணி, அவளுடைய சாமான்களை எல்லாம் எடுத்து வந்து வெளியே வீசினான். அவளையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி கதவை டமாரென சாத்தினான்.

## 13

ஹரிணி இழுத்துப் போர்த்திய புடவையுடன் கையில் சூட்கேஸுடனும் அம்மா வீட்டிற்குள் நுழைந்தாள்.

"அடடே! ஹரிணி வாம்மா!"

ஹரிணியைக் கண்ட தனபாக்கியம் மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். ஹரிணி ஒரு முறை வீட்டை சுற்றும் முற்றும் பார்த்தாள். வீட்டில் ஒருவரும் இல்லை. ஆனால் ஒருவித களை கட்டியிருந்தது. கேசரி மணமும் பஜ்ஜியின் வாசமும் மூக்கைத் துளைத்தது. ஜன்னலுக்கு புதிய திரை சீலை தொங்கிவிடப்பட்டு வீடே பளிச்சென இருந்தது.

"ஹரிணி நல்ல நேரத்துக்கு தான் வந்திருக்கே. இன்னிக்கு பெரிய தங்கை ரமணியை பொண்ணுப் பார்க்க வர்றாங்க. அவ ப்ரெண்ட் வீட்டுக்குப் போய் மேக்கப் செட் வாங்கிவர போயிருக்கா. இரண்டாவது தங்கை வழக்கம் போல் கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போயிருக்கா. உன் அப்பா மார்க்கெட் வரைக்கும் போயிருக்கார். ஆமா மாப்பிள்ளை எங்கே?"

ஹரிணி விரக்தியாய் சிரித்தாள்.

அப்பொழுதுதான் ஹரிணியின் முகத்தை தனம் கவனித்தாள்.

‘‘ஹரிணிம்மா ஏன் ஒரு மாதிரி இருக்கே? உதடு ஏன் வீக்கமா இருக்கு? கன்னத்தில் வேற அடிபட்டிருக்கே?’’ பதற்றத்துடன் கேட்டாள்.

‘‘அ.. அவர் என்னை வீட்டை விட்டு துரத்திட்டா ரும்மா..’’

தனபாக்கியம் அதிர்ந்து போனாள்.

‘‘என்னடி சொல்றே?’’

‘‘எல்லாமே முடிஞ்சு போச்சும்மா.’

ஆதித்யாவை காதலித்தது முதல் பிறகு நடந்தவற்றை எல்லாம் ஒப்பித்தாள். அம்மா தன் நிலையை கண்டு கட்டித் தழுவி ஆறுதல் சொல்லுவாள் என நினைத்தாள் ஹரிணி. மாறாக தனபாக்கியம் அவளை எரிச்சலுடன் பார்த்தாள்.

‘‘மாப்பிள்ளை உன்னைத் துரத்திட்டால் நேராக இங்கே வந்துவிடுவதா?’’

ஹரிணி விசுக்கென நிமிர்ந்தாள். ‘‘அம்மா என்ன சொல்றீங்க?’’

‘‘நீ நேராக உன் மாமியார் வீட்டுக்குப் போயிருக்கணும். அதுதான் உன் வீடு. அதை விட்டுட்டு இங்கே வந்து நின்னுகிட்டு என் கழுத்தை அறுக்காதே.’’

‘‘அம்மா நீங்களே இப்படி சொன்னால்... அவர் முந்தி மாதிரி இல்லை. என்னை அநியாயத்துக்கு அடிச்சு



கொடுமைப்படுத்தறார். இந்த விஷயத்தை என் மாமியாரிடம் கொண்டு போனாலும் அவங்க பிள்ளைக்கு தான் சப்போர்ட் பண்ணுவாங்க.’’

‘‘நீ ஆதித்யாவைக் காதலிச்சதை ஏன் மறைச்சே. படுபாவி என்னிடமாவது சொல்லியிருக்கலாமே. உன் காதலை தியாகம் பண்றதாக நினைச்சு எல்லோரையும் ஏமாத்தி உன் தலையில் நீயே மண்ணை வாரி கொட்டிக் கிட்டியே..’’

‘‘இக்கட்டான சூழ்நிலையில் எது சரினு தெரியாமல் ஒரு முடிவை எடுத்து விட்டேன். நடந்தது நடந்து போச்சு. அவர் கோபம் தணியும் வரை நான் இங்கே இருக்கேன்’’ என்று கூறிவிட்டு தன் அறையை நோக்கி சூட்கேஸுடன் விரைந்தவளை தனபாக்கியம் தடுத்து நிறுத்தினாள்.

‘‘மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரமாச்சு. இந்நேரம் நீ இப்படி வாழாவெட்டியா இங்கே இருக்கிறது உன் தங்கைகளின் வாழ்வைதான் பாதிக்கும். வெளியே போ!’’

ஹரிணி உறைந்து போனாள்.

‘‘அம்மா அவர் என்னை கழுத்தைப் பிடித்து வெளியே துரத்திட்டார். நீங்களும் என்னை வெளியே துரத்தினால் நான் எங்கேம்மா போவேன்?’’ ஈர விழிகளுடன் கேட்டாள்.

‘‘என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ? எனக்குத் தெரியாது. இந்த வீட்டுக்கு வந்தால் மாப்பிள்ளையோடு சேர்ந்து வா இல்லையின்னா இந்தப் பக்கமே வராதே. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு!’’

சொல்லிவிட்டு தனபாக்கியம் உள்ளே போய்விட்டாள்.

''அம்மாவா இது? என் கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வந்தால் கூட கலங்குபவள் இன்று இப்படி அலட்சியப்படுத்துகிறாள். கட்டின புருஷன் கூட வந்தால்தான் பிறந்த வீட்டில் மதிப்பா? மறுபடியும் சித்தார்த்திடம் போய் மன்னிப்பு கேட்டு பார்க்கலாமா? என்னை எப்படி எல்லாம் நேசித்தான். தினம் தினம் என்னை உச்சந்தலையில் வெச்சுத் தாங்கினவன் எப்படியாவது அவன் காலில் விழுந்தாவது என்னை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். திகிலுடன் அவள் வீட்டுக்குள் சென்றாள். வாசற் கதவை திறந்த உடனேயே குப்பென்று குடலைப் புரட்டும் அளவிற்கு விஸ்கியின் நாற்றம். அவளை அடித்து நொறுக்கிய போது இறைந்த பொருட்கள் அப்படியே இறைந்து கிடந்தன. சித்தார்த் குடிபோதையில் மல்லாக்க விழுந்து கிடந்தான். அவனருகில் விஸ்கி பாட்டில்களும், கண்ணாடி டம்ளரும் இருந்தன. ஹரிணி நடுக்கத்துடன் அவனருகில் சென்று அவனது தோளைத் தொட்டு உலுக்கினாள். சித்தார்த் மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தான். ஹரிணியின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அவ்வளவுதான்! விசுக்கென்று எழுந்தான்.

''கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியும் வெட்கமில்லாமல் இங்கே வந்து நிற்கிறாயே உன்னை... அருகில் கிடந்த விஸ்கி பாட்டிலை எடுத்து நாற்காலியின் காலில் உடைத்து உடைந்த பாதி பாட்டிலை அவள் மீது தூக்கி வீசினான். பாட்டில் ஹரிணியின் நெற்றியில் பட்டு ரத்தம் கசியத் தொடங்கியது.

''சித்தார்த், ஏன் இப்படி காட்டுமிராண்டித் தனமாக நடந்துக்கிறீங்க?''



''ச்சீ நிறுத்துடி பண்ற தப்பையும் பண்ணிட்டு வந்து உபதேசமா பண்றே?''

''நான் அப்படி என்ன தப்பு பண்ணிட்டேன். கல்யாணத்துக்கு முன்னாடி ஒருத்தனை காதலிச்சேன். மற்றபடி நான் களங்கப்படலையே. காதலிப்பது தவறா? இந்த பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் எந்த பருவத்திலாவது கண்டிப்பாக காதல் வரத்தான் செய்யும்..''

''பண்றதையும் பண்ணிட்டு நியாயமா பேசறே, போடி வெளியே!''

மீண்டும் அவளது கூந்தலைப் பற்றி தரதரவென இழுத்து வெளியே தள்ளி, கதவைச் சாத்தினான்.

## 14

எங்கு போவது என்று புரியாமல் விரக்தியுடன் பஸ் ஸ்டாண்டில் நின்றுக் கொண்டிருந்தாள் ஹரிணி. வெயில் உச்சந்தலையை சுட்டெரித்தது. விதியை நினைத்து நொந்துக் கொண்டாள்.

வாழ்க்கையின் உச்சகட்ட மனவேதனையில் இருந்தாள். பெற்ற தாயும் ஏற்றுக் கொள்ளவில்லை. தாலி கட்டிய கணவனும் ஏற்றுக் கொள்ளவில்லை. யாருமே என்னை ஏற்றுக் கொள்ளாத நிலையில் நான் ஏன் இந்த உலகில் இருக்க வேண்டும். பெரிதும் குழம்பி தவித்தாள். நாக்கு வரள, கண்கள் செருக மயங்கி சரிய போனவளை ஆதித்யா ஓடி வந்து தாங்கிப் பிடித்தான். திண்டில் அமர வைத்தான். ஹரிணியின் முகத்தில் தண்ணீர் தெளித்து மோர் வாங்கிக் கொடுத்தான். ஹரிணியின் மயக்கம் மெதுவாகத்

தெளிந்தது. கண்களைத் திறந்து பார்த்தாள். ஆதித்யாவின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அவனைக் கண்டதும் கத்தத் தொடங்கினாள்.

''அடப்பாவி இப்படி அநியாயமாக என் வாழ்க்கையை சீரழிச்சிட்டியே.. இதுதான் நீ என் மேல் வைச்சிருந்த அன்பா?''

''ஹரிணி என்ன சொல்றே எனக்கொன்னும் புரியலை. ரொம்ப நாளைக்கப்புறம் என்னைப் பார்த்ததால் சந்தோஷப்படுவாய்னு நினைச்சேன். ஏன் ஹரிணி இப்படி நடந்துக்கறே?''

''என் கணவருக்கு நான் உனக்கு எழுதிய கடிதத்தை அனுப்பி என்னை அவரிடமிருந்து பிரித்து என் வாழ்க்கையையே நாசம் பண்ணிட்டியே?''

''நான் எந்தக் கடிதத்தையும் உன் கணவருக்கு அனுப்பவில்லை. நீ என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டே!''

''நீதான் அனுப்பி இருக்கே. உன்னைத் தவிர யார் அனுப்பி இருக்க முடியும்?''

ஆதித்யா சில நொடிகள் சிந்தித்துப் பார்த்தான்.

''என்னால உனக்கு ஏதும் தொந்தரவு வந்துடக் கூடாதுன்னு யாரிடமும் சொல்லிக்காமல் சொந்த ஊரிலிருந்த என் நண்பன் வீட்டுக்குச் சென்று விட்டேன். என் நண்பனிடம் நடந்ததை சொன்னேன். அவன்தான் உன் மீது கோபப்பட்டு எனக்கே தெரியாமல் இந்த லெட்டரை அனுப்பியிருக்கணும். அவன் இப்படி செய்வான் என்று நான் கொஞ்சம் கூட நினைக்கலை ஸாரி ஹரிணி!''

ஆதித்யா நிஜமாகவே வருத்தப்பட்டான்.



''உன் நண்பன் அனுப்பின கடிதத்தால் என் வீட்டில் பெரிய பூகம்பமே வெடிச்சிடுச்சு. என் கணவர் என் மேல் ஆத்திரப்பட்டு என்னை வீட்டை விட்டுத் துரத்திட்டார். என் அம்மா வீட்டிலும் வாழா வெட்டியாக ஏற்க மறுத்து விட்டனர். இப்போ நான் நடுவீதியில் அநாதையாய்..''

விக்க விக்கி அழுதாள்.

''அழாதே ஹரிணி. நீ அழுதால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?''

''சொல்லு ஆதித்யா. என் வாழ்க்கை மீண்டும் பசுமையாக மாற நீ என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கேன்.''

''உனக்கு விருப்பமிருந்தால் நாம இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம். என் சொந்த ஊருக்கே உன்னைக் கூட்டிட்டுப் போய் ஆயுசு முழுக்க உன்னைக் கண் கலங்காம நான் வெச்சுக்கிறேன்!''

ஆதித்யா இப்படி கூறுவான் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. அவனையே பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க ஆதித்யா? இது சாத்தியப்படுமா?''

''இன்னொருத்தனின் காதலி தனக்கு மனைவியாகி விட்டதால் உன் கணவர் உன்னை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். உன் தங்கைகளின் எதிர்காலம் உன்னால் பாதிக்கப்படுமென்று உன்னை உன் அம்மா ஏற்க தயங்குகிறார். இந்நிலையில் என் ஆதரவு உனக்கிருந்தால் நன்றாக இருக்கும். யோசித்துப் பாரு!''

ஹரிணி பெரிதும் குழம்பினாள்.

''என்ன ஹரிணி குழப்பமாக இருக்கிறதா? இன்று மாலை நான் என் ஊருக்குக் கிளம்புகிறேன். நீ உன் முடிவை தெரிவித்துவிட்டால், உன்னையும் என்னுடன் அழைத்துப் போய் விடுவேன். என்னை மறுமணம் செய்து கொள்வதில் எந்த தவறும் கிடையாது. மீண்டும் யோசித்துப் பாரு. உனக்கே இது நல்லது என்பது புரியும்.

## 15

ஆதித்யாவை நான் மறுமணம் செய்துக் கொண்டால் சரியாக இருக்குமா? சித்தார்த் திடம் கொஞ்சநாள் குடும்பம் நடத்திவிட்டு பழைய காதலனை கைப்பிடித்தால் வாழ்க்கை எவ்வாறு இருக்கும்? ஆதித்யா என்னைத் நன்றாக வைத்துக் கொள்வானா? ஊர் உலகம் என்னை பற்றி என்ன நினைக்கும்? யாரிடம் யோசனைக் கேட்பது என்று குழம்பித் தவித்தாள்.

சட்டென தோழி விசாலியின் ஞாபகம் வந்தது. அருகிலிருந்த எஸ்.டீ.டி. பூத்திற்குப் போய் அவளுக்குப் போனை போட்டு நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தாள். நடந்தவைகளைக் கேட்ட விசாலி பெரிதும் வருந்தினாள்.

''என்ன ஹரிணி உன் வாழ்க்கை இப்படி ஆயிடுச்சு. உனக்கு என்ன யோசனை சொல்றதுனு எனக்குப் புரியலை. என் உறவுக்காரர் ஒருவர் மனநல மருத்துவராக இருக்கிறார். பேரு சாந்தா. நீ அவரை சந்தித்து ஆலோசனைக் கேட்டால் நல்ல பதிலை தருவார் அவருடைய விலாசத்தை எழுதிக்கோ!'



விசாலியிடமிருந்து மனநல மருத்துவர் சாந்தாவின் விலாசத்தை பெற்றுக் கொண்டு அவரது வீட்டைக் கண்டுபிடித்து ஹரிணி சென்றாள். ஹரிணி சென்றபொழுது சாந்தா ஃப்ரீயாகத்தான் இருந்தார்.

பெயருக்கு ஏற்ற மாதிரி சாந்தமாக இருந்தார். மென்மையான தோற்றம். ஹரிணியை ஏறிட்டார்.

''சொல்லும்மா உன்னுடைய ப்ராப்ளம் என்ன?''

''என் பேர் ஹரிணி மேடம். விசாலியின் தோழி நான் மிகப் பெரிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேன்.. எனத் தொடங்கி எல்லாவற்றையும் சொன்னாள்.

சாந்தா மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டை மௌனமாகச் சுழற்றியபடி ஹரிணி கூறிய எல்லாவற்றையும் கேட்டுவிட்டு பேசத் தொடங்கினாள்.

''உன்னுடைய கல்லூரி காதல் கானல் நீராகிப் போனது போனதாகவே இருக்கட்டும். உன் கணவரது கோபம் தற்காலிகமானதுதான். அவர் உன்னை மனதார காதலித்துத் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் நீங்களோ ஒரு அடமானப் பொருளாக செய்நன்றிக்கு பரிகாரமாகத்தான் அந்த திருமணத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அவரை முழுமையாக காதலித்து ஏற்கவில்லை. இதோடு உங்களுக்கு ஒரு காதல் இருந்திருக்கிறது. இதெல்லாம் சேர்ந்துதான் உங்கள் கணவரை பாதித்திருக்கிறது. திருமணமானப் பெண் மற்றொருவனுடன் ஓடிப் போவது நம் சமூகத்துக்கு ஏற்பான விஷயமில்லை. இதையெல்லாம் காதலனிடம் சொல்லி அவனுடனான தொடர்பை துண்டித்துவிடு. நீ ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலி. உனக்குத் தாலி கட்டியவரும் உன்னைக் காதலித்தவர்தான். அதனால்

காதலின் வலி அவருக்கு நிச்சயம் புரியும். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதே. உன் கணவரின் கோபம் குறையும் வரை, உன் அம்மா வீட்டில் இருந்தால் போதும். உறவு சொல்லாத பாடத்தை, பிரிவு சொல்லும். சொந்தத்துக்கு முகவரி தேவையானால் தானே தேடி வரும் ஓகே!''

''ரொம்ப தேங்க்ஸ் மேடம். உங்கள் அட்வைஸ் குழம்பியிருந்த என் மனதைத் தெளிவுப்படுத்தி விட்டது. நான் வர்றேன் மேடம்!''

ஹரிணி வெளியே வந்தாள். அநாதையாக நிற்கிறேன் என்று ஆதித்யாவை கைப்பிடித்து மிச்சமிருக்கும் வாழ்க்கையையும் கறைபட வாழக் கூடாது. அம்மா வீட்டிற்கு செல்வதிலும் எந்த பயனும் இல்லை.

பஸ் ஸ்டாண்டிற்கு வந்தாள். எதிர் திசையில் ஆதித்யா நகங்களைக் கடித்துத் துப்பியபடி படபடப்புடன் ஹரிணிக்காகக் காத்துக் கொண்டிருந்தான். இவளை கவனிக்கவில்லை. ஹரிணியும் அவன் கண்ணில் பட்டு விடாமல் அங்கு வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். லேடீஸ் ஹாஸ்டல் நோக்கி பயணிக்கத் தொடங்கினாள்.

என் அப்பாவின் உயிரை காப்பாற்றியவனுக்கு பரிகாரமாக என் காதலைத் துறந்து அவனை திருமணம் செய்து கொண்டேன். ஏதாவது ஒரு காலகட்டத்தில் இதை என் சித்தார்த் உணர்ந்து புரிந்துக் கொள்வான். அவன் கோபம் தணிந்து என்னைத் தேடி வரும் வரை என் சித்தார்த்துக்காக நான் காத்திருப்பேன்! நிச்சயமாகக் காத்திருப்பேன்! ஹரிணி காத்திருந்தாள்!

★

கோயம்புத்தூர் -641 002